# மக்கள் மறு வாழ்வு

புத்தாண்டு
பொங்கல்
சிறப்பிதழ்

மலர்: 4 தை - ஜனவரி 1986 விலை 75 காசுகள் இதழ்: 4



பொங்குக பொங்குக்
இவர் தம் வாழ்வில்
புதுவாழ்வு மலர்க வென்று
பொங்குக!

## இலங்கை மலையகத் தமிழர்

# போராட்டம்

**1986 சமாதானம், நட்புறவு, தேசிய சமரசம் நிலவும் ஆண்டாக அமையும் வண்ணம், தியானம். கூட்டுப் பிரார்ந்தனை மூலம் அகிம்சா போராட்டம் நடத்த தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.**

இதுகுறித்து சமீபத்தில் (தமிழக) தமிழ், ஆங்கில நாளேடுகளில் இ. தொ.கா முழு பக்க விளம்பரம் வெளியிட்டுள்ளது.

தற்போது இலங்கை ஒரு உள் நாட்டு யுத்தத்தின் விளிம்பில் இருக்கிறதென்பது வெள்ளியிடைமலை. (கொழும்பிற்கும், திருச்சிக்கும் தாவிப் பாய்ந்துக் கொண்டிருக்கும் வியாபாரக் கோஷ்டிகளுக்கு இலங்கையில் எல்லாம் சமாதானமாக என்பது வேறு விடயம்),

1985 டிசம்பரில் பிரபல ஆங்கில சஞ்சிகைகளில் வெளிவந்த ஜே. ஆர். ஜயவர்த்தனாவினதும் (INDIA TODAY) ஈழத்துத் தமிழ் தலைவர்களின் (TULF, EROS, PLOT, LTTE) பேட்டிகள் அங்கு 'உக்கிர'மாகிக் கொண்டிருக்கிற யுத்த நிலையை தெளிவாக விளக்குகின்றன.

இந்த நெருக்கடி மிக்க நிலையில்-திரிசங்கு சுவர்க்க நிலையில்இருக்கும் தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சனையை உலகிற்கு எடுத்துக் காட்டும் (குறைந்த பட்சம் தமிழ்நாட்டிற்கு) முயற்சியாக இந்த விளம்பரத்தை வெளியிட்டிருப்பதற்கும், இதன் மூலம் இலங்கையில் தற்போது நிலவும் பிரச்சனையை தீர்ப்பதில் இலங்கை அரசாங்கத்தின் கையிலாகத் தனத்தை, திறமையீனத்தை வெளிப் படுத்த துணிந்தமைக்கு இ.தொ.காவை பலர் பாராட்டுகிறார்கள்.

இந்த ஆண்டை அமைதி ஆண்டாக செய்கின்ற முயற்சியாக தியானம். பிரார்த்தனை ஒரு வழியாக இப்போராட்டம் மேற்கொள்ள பபட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் காலை 3 மணி நேரம் தியானம், பிரார்த்தனை செய்துவிட்டே தோட்டத் தொழிலாளர் வேலைக்கு செல்வது என்பது தோட்டத்து வேலையை பாதிக்கின்ற ஒன்றாகும். அதாவது 7 மணியிலிருந்து 10 மணிவரை

(15ம் பக்கம் பார்க்க)

# மக்கள் மறுவாழ்வு

மலர்: 4 தை 1986 இதழ்: 4


## புதிய ஆண்டில்...!

1985ம் ஆண்டு கழிந்து 1986 மலர்ந்து விட்டது. இந்த ஆண்டை அமைதி ஆண்டாக கடைப்பிடிக்க ஐக்கிய நாடுகள் அவை பிரகடனப்படுத்தியுள்ளது.

இன்றைக்கு உலகமெங்கினும் அமைதி இல்லை.

எங்கு பார்த்தாலும் பிரச்சனை — ஏகாதிபத்திய போட்டிகள்; எல்லைத்தகராறுகள்; அரச பயங்கர வாத அடக்குமுறைகள் ஒவ்வொரு நாட்டுக்குள்ளும் இனப் பிரச்சனைகள்; சாதி சமய பூசல்கள்.

இந்த பிரச்சனைகளால் மக்கள் அமைதி இழந்து வாழ்கிறார்கள் •தங்கள் உயிரையும், உடமைகளையும். நாட்டையும் இழந்து ஏதும் இல்லாத அகதிகளாகவும் நிற்கிறார்கள்,

வெள்ளம், வரட்சி, வறுமை நோய், விபத்துகள் என்று தம்மை இழந்து வாழும் நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறார்கள்,

இந்த இழிநிலைகளையும் கொடுமைகளையும் எதிர்த்து புரட்சிகள், கிளர்ச்சிகள், வேலை நிறுத்தங்கள் ஊர்வலங்கள் நடக்கவும் இன்னும் பலவகையில் தமது எதிர்ப்புகளை காட்டவும் மக்கள் தயங்கவில்லை.

இந்த அமைதி ஆண்டில் மக்களுக்கு—மனித குலத்திற்கு அமைதி தோன்ற வழி பிறக்குமா?

இந்த ஆண்டில் பிரச்சனைகளுக்கு தீர்வு பிறக்கவும், அமைதியும், சமாதானமும் தோன்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இந்த ஆண்டில் நாமும் நமது பங்கினை செலுத்தி அமைதி பிறக்க சங்கல்பம் மேற் கொள்வோமாக! O

# முகாமில் இருக்கும் அகதிகள் கவலை

"இப்படி ஒரு வாழ்வா? எத்தனை காலத்திற்கு இந்த வாழ்வை அனுபவிப்பது,

இவ்வாறு தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத் தொடர்ந்து ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளானார்கள்.

1883ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கானவர்கள அகதிகளாக இந்தியா வந்து தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களுக்கு இந்திய அரசு நிவாரண உதவிகள் அளித்து எதிர்ப்பார்த்த வண்ணம் இருக்கின்னறர்.

ஆயினும் இலங்கைப் பிரச்சனை தீராத ஒன்றாக இருப்பதால் இவர்கள் நாடு திரும்பு எண்ணமே அற்றுப் போனவர்களாக சலிப்படைந்திருக்கின்றனர்.

இப்படி எவ்வளவு காலத்திற்கு அரசு உதவிகளையும், அதிகாரிகளையும் பார்த்து பிச்சைக் காரர்களைப் போலவே இருந்துக் கொண்டு வாழ்வது?

உதவிகளை பெற்றுகொண்டு உழைப்புக்கு வழியில்லாமல் சோம்பேறிகளாக வாழ்வது?

வருகின்றது - தமிழ் நாட்டில் பல்வேறு பட்ட இடங்களில் முகாம்கள் அமைதி அவர்களுக்கு உதவிகள் செய்து வருகிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் சிலவுத் தொகையும், குறைந்த விலையில் அரிசியும் இன்னும் அவர்களுக்கு வேண்டிய பாத்திரங்கள், பாய் போனற அத்தியாவசிய பொருட்களையும் அளித்து உதவ வருகிறது.

இந்திய அரசின் உதவியில், முகாம்களில் தங்கி இருக்கும் இவர்கள் எப்போது இலங்கைப் பிரச்சனை தீரும்; தமது தாயகம் திரும்புவோம் என்றும் இது ஒரு வாழ்வா என்றும் கவலைத் தெரிவிக்கின்றனர்.

பலர் விரைவில் முகாம்களை விட்டு வெளியேறவும், சுயமாக தமது வாழ்வுக்கு வழிகளை ஏற்படுத்திக் கொள்ளவும் முடிவுக்கு வந்துள்ளது.

குறிப்பாக அகதிகளாக வந்துள்ள இந்தியத் தமிழர்கள் - ஒப்பந்தப்படி தாயகம் திரும்ப வேண்டியவர்கள் பலர் இந்த முடிவுக்கு வந்திருப்பதாக தெரிவிக்கின்றனர். O



## பவானி மில் கதவடைப்பு :

# தாயகம் திரும்பியோர் நெருக்கடி !

கோயம்புத்தூர், குறிச்சி சுந்தரபுரத்திலுள்ள பவானி மில் கதவடைக்கப்பட்டதால் அதில் பணி செய்யும் தாயகம் திரும்பியோர் அவதிப் படுகிறார்கள்.

தாயகம் திரும்பியோருக்கு அளிக்கப்படும் மறுவாழ்வு உதவித் திட்டப்படி தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் மூலமாக மேற்படி மில்லில் 101 தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு வேலை அளிக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகளாக வேலை செய்து வருகிறார்கள். வருடங்கள் ஒன்றரை ஆகியும் ஆரம்பத்தில் கொடுத்து வந்தது போலவே ரூ 11.50 ஊதியமாகக் கொடுத்து வந்தனர்.

இந்த குறைந்தபட்ச சம்பளத்தில் வாழ முடியாத நிலையில், 26.8.85 அன்று இவர்கள் சம்பள உயர்வு மற்றும் பல பிரச்சனைகளை கோரிக்கையாக முன் வைத்து, மாவட்ட ஆட்சியாளர்களிடம் நேரிடையாக மனு கொடுத்தனர். தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி அதிகாரிகளுக்கும் மனு கொடுத்தனர். இது சம்பந்தமாக உதவி மாவட்ட ஆட்சியாளர் இவர்களை தொழிலாளர் துறை உதவி ஆட்சியாளரை சந்திக்கும்படி அறிவுறுத்தியுள்ளார். அவரோ இவர்களை ஒரு தொழிற்சங்க உதவியை நாடினால் நல்லது என்று தெரிவிக்க அதன்படி இவர்கள் தொழிற்சங்கரீதியாக தமது பிரச்சனைகளை வென்றெடுக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதற்கிடையில், 17.9.85 முதல் வேலை செய்யும் பஞ்சாலை அண்ணா தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தமது கோரிக்கைகளை முன் வைத்து உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

24.9.84 வரை தாயகம் திரும்பியத் தொழிலாளர்கள் அவரவர் பகுதிகளில் தேங்கிக் கிடந்த வேலை செய்து வந்தனர். 25.9.84 அன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுடைய வேலைகளைச் செய்யும்படி மில் நிர்வாகத்தினர் வற்புறுத்தியுள்ளனர்.

அவர்கள் பக்கத்திலிருந்து தங்களுடைய வேலையை செய்ய வேண்டாம் என்றும் தடுத்தனர்.

அப்படி தடுப்பவர்கள் யார் என்று மில் நிர்வாகம் தாயகம் திரும்பியோர்களை வற்புறுத்தியிருக்கின்றனர் இது மிக தர்மசங்கடமான நிலைக்கு தாயகம் திரும்பியோர்களை தள்ளியுள்ளது. உள்ளூர் தொழிலாளர்கள் தாயகம் திரும்பியோர்களிடம் பிரச்சனை கொள்ளத்தக்க சூழ்நிலை மில் நிர்வாகத்தின் மூலம் உருவாக வழி வகுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வேலை செய்ய தடுப்பவர்கள் பற்றி தாயகம் திரும்பியோர் எழுதி கொடுப்பதன் மூலம் பகையை-பிரச்சனைகளைத் வெளியே தேடிக் கொள்வோம் என்று தெரிவித்திருக்கின்றனர். அதற்காக பாதுகாப்பு ஏற்பாடு செய்வதாகவும் அதற்கு பாதுகாப்பு மனு எழுதியும் நிர்வாகம் கேட்டுள்ளனர்

தாயகம் திரும்பியோர் 23.9.85 அன்று ஆட்சியாளருக்கும், வங்கி அதிகாரிக்கும் நேரிடையாக பாதுகாப்பு மனு தந்துள்ளனர்.

அதன்பின் 25.9.85 முதல் சிலருக்கு மட்டுமே வேலை வழங்கப்பட்டது.

வேலையிழந்து வேறு வழியில்லாது இருக்கும் தாயகம் திரும்பியோர் அண்ணா தொழிலாளர் சங்க தலைவரை அணுகி அரசுடன் பேசும்படி முறையிட்டுள்ளனர்.

1.10.85 அன்று மில்லிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டிருந்த பொருட்களை போலீஸ் பாதுகாப்புடன் வெளியில் எடுத்துச் சென்றது நிர்வாகம்.

இதை தடுத்தபோது அனைவரும் போலீஸ் நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு மாலை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2.10.85 முதல் மில் கதவடைப்பு செய்யப்பட்டு விட்டது ஒன்றரை வருடங்களில் மூன்று முறை இப்படி மில் மூடப்பட்டிருக்கிறது. கதவடைப்பு செய்யப்பட்டதால், இதை மட்டுமே நம்பி வாழும் தாயகம் திரும்பிய 101 குடும்பங்களும் வறுமையில் வாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

**வாசகர்களுக்கும்**
**ஆதரவாளர்க்கும்**
**எமது**
**இனிய**
**புத்தாண்டு**
**பொங்கல்**
**வாழ்த்துக்கள் !**

## சென்னை வியாசர்பாடி பக்தவச்சலம் நகர் :

# வீட்டுமனை வழங்குவதில் வேறுபாடு !

சென்னை வியாசர்பாடி, சாஸ்திரி நகரிலிருக்கும் பர்மா தாயகம்திரும்பிய மக்களின் மறுவாழ்வு வீட்டு வசதி வழங்கும் திட்டப்பணி தீராத பிரச்சனையாக நெடுங்காலமாக இழுபட்டு வருகிறது

இப்பணி 1978-ல் தமிழக முதல்வரால் துவக்கப்பட்டு 1980 யில் முடிக்க இரண்டாண்டு கால நிர்ணயம் செய்து திட்டமிடப்பட்டும் இன்னும் முடிந்தபாடில்லை.

7 ஆண்டு நிறைவு பெற்று நிறைவு பெறாததால் மக்கள் ஏமாற்றத்திற்கும் பிரச்சனைகளுக்கும் உள்ளாகி இருக்கிறார்கள் திட்டப்பகுதிகளில் ஒன்றாகிய பக்தவத்சலம் காலனியில் 1979-ல் 1200 சதுரடி வீட்டு மனை இடம் அளிக்கப்பட்டுள்ளது. பின்னர் 1982ல் சாஸ்திரி நகரில் 800 முதல் 850 சதுரடி இடம் அளிக்கப்பட்டது. அரசினருக்குள்ள சிரம நிலை காரணமாக குறைந்த அளவு வழங்கப்பட்ட இடத்தை ஏற்றுக்கொண்ட மக்கள் 450 குடும்பங்களாகும்.

எஞ்சியுள்ள சுமார் 300 குடும்பத்தினருக்கு மேலும் 400 சதுரடியாக வீட்டுமனை இடமாக குறைந்து அளிப்பதற்கு மறுவாழ்வு வழியமைக்கும் குழு பரிந்துரை செய்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது, மக்கள் அரசு பொறுப்பில் இருக்கும் மாவட்ட ஆட்சியாளர் ஒரே திட்டத்தில் 1200 800, 400 சதுரடியாக வீட்டுமனை இடம் அளிக்க முன்வருவது முறையான மறுவாழ்வு திட்டப் பணியாக அமைய முடியாதென்றும் சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு தாயகம் திரும்பியோர் நல உரிமைச் சங்கம் தெரிவித்துள்ளது.




# வாங்கிய நிலத்தில் வீடுகட்ட அரசு உத்திரவிட வேண்டும்!

ஐயா,

தங்களுக்கு வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்வது 1981, 82ம் ஆண்டுகளில் சுமார், 127 இலங்கை தமிழர்கள் தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி மூலமாக தூத்துக்குடி நூற்பு ஆலைக்கு வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். அன்று முதல் மேற்படி ஆலையில் பணி புரிந்து வருகிறார்கள். இவர்கள் அரசு கொடுக்கும் வீட்டுக் கடனை வாங்கி வீடு கட்டுவதற்காக தூத்துக்குடி தாலுகா மடத்தூர் சர்வே எண். 383-386/2—388/1ஏ 363-1ஏ என்ற நிலத்தை கிரயம் கொடுத்து 7½ ஏக்கர் வாங்கினார்கள். இந்த நிலம் வாங்குவதற்கு முன்பு, சர்வே நம்பரைக்காட்டி, தாசில்தார் அவர்களிடம் இந்நிலத்தில் வில்லங்கம் ஏது உண்டா வாங்கலாமா கூடாதா என்று கேட்டதற்கு வாங்கலாம் என்று சொன்ன படியால் தான் வாங்கினார்கள் இந்தநிலத்தை. மறுவாழ்வு இயக்குனர் கூட தூத்துக்குடிக்கு இருமுறை விஜயம் செய்த போது சப்கலைக்டர், தாசில்தார்மற்றும் தூத்துக்குடி ஸ்பின்னிங் மில் மேலாளர் ஆகியோரோடு நிலத்தை பார்வையிட்டு வீடு கட்ட தகுந்த நிலம் தான் என்று சொன்னார்கள்.

அதன்பின் 127 நபர்களில் தலைவரான திரு சுப்பிரமணியம் என்பவர் சம்பந்தபட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு வீட்டுக்கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய குடும்பக்கார்டு, தஸ்தாவேஜுகளை பூர்த்தி செய்து கடன் கேட்டு விண்ணப்பித்தார். தாலுகா முதல் கலைக்டர்'ஆபீஸ்வரை சென்ற குடும்பக்கார்டுகளுக்கும் மற்றும் தஸ்தாவேஜுகளும் திருப்பி அனுப்பிவிட்டு இந்நிலம் சிப்காட்டிற்கு தேவை படுவதால் கடன் வழங்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

அதன்பின் சிப்காட் அலுவலகத்துக்கு தொடர்பு கொண்டு சிப்காட்டில் உள்ள நிலத்தில் அகதிகள் என்றபடியால் வீடு கட்டி கொள்ளட்டும் என்று உத்தரவு வர 82 முதல் 84 வரை காலதாமதத்தில் பின் கிடைக்கப் பெற்றது.

அதன்பின் குடும்பக் கார்டும் அனைத்து தஸ்தாவேஜகளையும் பூர்த்தி செய்து கடனுக்கு விண்ணப்பித்து இன்று கடன்வரும் நாளை வரும் என்று கலைக்டர் அலுவலக அதிகாரிகள் நாளை கடத்தி வந்தார்கள். அதன் பின் இந்த நிலம் அரசுக்கு தேவைப் படுவதால் கடன் வழங்க முடியாது என்று சப் கலைக்டர் சொல்லி விட்டார்; வேறு நிலம் பார்த்துட்டு விட்டு வாங்க கடன் தருகிறேன் என்று சொல்கிறார், நூற்பு ஆலையில் பணிபுரியும் இவர்கள் குறைந்த சம்பளம் தான் பெறுகிறார்கள். வீடு கட்ட நிலம் தேவைப்பட்டதால் மின் நிர்வாக உதவியோடு சுமார் 2½ இலட்ச ரூபாய் கொடுத்து கிரயம் செய்தோம். இந்த பணம் ஒவ்வொரு நபரின் பெயரில் ரூபாய் 1,800 தமிழ் நாடு மெர்கன்டைல்ஸ் பேங்கில் கடனாக வாங்கியுள்ளார்கள். இந்த கடன் இந்த மனைபெயரில் அரசு கடன் வந்தபிறகு திருப்பித் தருகிறோம் என்று சொல்லிதான் வாங்கினார்கள், அரசே கடன் கொடுக்க மறுத்தால், வாங்கியகடன், வீடு எப்படி கட்டுவது? இதை அரசு அதிகாரிகள் கவனத்திற் கொண்டு, இலங்கைதமிழர்என்ற மனப்பான்மையுடனும் மேற்படி நிலத்தில் கடன் வழங்க உத்தரவு கொடுத்துதவும்படி தாழ்மையுடன் வேண்டுகிறோம். மேலும் இந்த நிலத்தில் அகதிகள் வீடுகட்டலாம் என அரசு அறிவிக்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம். அரசு அப்படி உத்தரவு தராவிட்டால் நிலத்துக்கான ரூபாய் 2½ லட்சத்தைஇவர்களே கட்டவேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் தெரிவிக்கிறோம்.

**வீ. பழனியாண்டி**
**வீ. சிவசாமி**
**ஆர். சுப்பிரமணியம்**
**ஐ. குருநாதன்**

தா.தி.கூட்டுறவுவங்கி
டெலிகேட்டுகள்,
தூத்துக்குடி.

# 2வது வியாபாரக் கடனை வழங்க தாமதிப்பதேன்?



ஐயா!

நான் 6-10-83 அன்று தாயகம் திரும்பினேன். நான் விதவை. எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். எனக்கு மண்டப முகாமில் வியாரக்கடன் முதல் தவணையாக ரூபா 2,000 வழங்கப்பட்டது.

அதைக் கொண்டு ஒரு கறவை மாடு பிடித்து அதில் கிடைக்கும் குறைந்த பட்ச வருமானத்தைக் கொண்டு நானும் எனது பிள்ளைகளும் வறுமைமிக்க வாழ்க்கை நடத்தி வருகின்றோம்.

நான் இரண்டாம் தவணை கடனுக்கு மனு செய்தும் இது வரை கடனுதவி கிடைக்க வில்லை; பலமுறை மனு செய்தும், நேரில் சென்று அதிகாரிகளைப் பார்த்தும் எனக்கு **கடனுதவி கிடைக்க வில்லை**— வருடங்கள் இரண்டு கடந்தும் எனக்கு கிடைக் வேண்டிய உதவி கிடைக்க வில்லை?

**சிவபாக்கியம்**

பாலகிருஷ்ணன் பட்டி
திருச்சி மாவட்டம்

## தாயகம் திரும்பியோர் முன்மாதிரி :

# கூட்டுறவு அடிப்படையில் பால் உற்பத்தி




டி. பாலகிருஷ்ணன்
தலைவர்
நீலகிரி கொளப்பள்ளி
விவசாய பால் உற்பத்தியாளர்
கூட்டுறவு சங்கம்

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு இந்திய அரசு வியாபாரக் கடன் கொடுக்கின்றது. இலங்கையில் தோட்டத் தொழிலாளியாக இருந்த இவர்களுக்கும் வியாபார நுணுக்கமோ, அல்லது கல்வி அறிவோ இல்லாததால் அவர்கள் பெற்ற கடனை சரியான முறையில் பயன் படுத்தாதுபணத்தை விரயம் செய்து விட்டு அல்லல் பட்டார்கள். இவர்களுக்கு அரசு வழங்கிய பணத்தை வைத்து செழுமையாக வாழவேண்டும் என்ற எண்ணத்துடன் 1-9-81ம் தேதி ஒருபால் சேகரிப்பு நிலையத்தை நீலகிரி கொளப்பள்ளியில் ஆரம்பித்தோம்.

நாங்கள் பால் சேகரித்தால் எமக்குபால்வழங்குவதற்கு உறுதியளித்தவர்களின் வாக்குறுதிகளின்படி எமக்கு 200 லிட்டர் பால் கிடைக்க வேண்டும். இந்த உறுதி மொழியை நம்பி ஆரம்பித்த தினத்தில் 17 லிட்டர் பால் மாத்திரமே, அதாவது பால் சேகரிப்பு நிலையத்தை ஆரம்பிக்க முன்னின்றவர்களுடைய பால் மாத்திரமேகிடைத்தது. இது எமக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. இருப்பினும் தொடர்ந்து செயல்படுவது என்று முடிவெடுத்தோம்.

எம்முடைய நீண்டகால லட்சியத்தை பந்தலூர் இந்தியன் வங்கி மேலாளரிடம் விளக்கி எமது அங்கத்தவர்களுக்கு கறவை மாடுகளுக்கான கடன் வழங்ககோரினோம். அப்போது மேலாளராக இருந்த திரு லட்சுமிபதி அவர்கள் நிலையத்திற்கு கடன் வாங்கினால் கால்நடைகளுக்கு மருத்துவம், மற்றும் பாலுக்கான சந்தைக்கு நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உத்தரவாதம் கொடுக்க முன் வந்தால் தாயகம் திரும்பியவர்களுக்கு கறவைமாடுகளுக்கான கடன்கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார்.



பால் உற்பத்தியில் தாயகம் திரும்பியோர்கள்

அதன்படி நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய நிர்வாக இயக்குநர் திரு ராமகிருஷ்ணன் ஒரு உத்திரவாத கடிதத்தை இந்தியன் வங்கி மேலாளருக்கு அனுப்பினார். அதன்படி கடன் வேண்டுவோருக்கு முன் கூட்டியே ரூபா 1000/- வங்கியில் செலுத்திட கேட்டுக் கொண்டோம். அவ்வாறு ரூ. 1000 - வங்கியில் செலுத்தியவர்களுக்கு எங்களுடைய நிலையத்தின் சிபார்சின் பேரில் இரண்டு தவணையில் 80 நபர்களுக்கு ரூபாய் 3000மும் ஏற்கனவே வங்கியில் செலுத்தியிருந்த 1000மும் சேர்ந்து ரூபாய் 4000த்திதிற்கு கறவை மாடுகளை பிடித்தார்கள். இதன்படி ரூபா 3,20,000/- பெறுமதியான கறவை மாடுகள் எம்முடைய நிலையத்திற்கு வந்து சேர்ந்தன, இதனால் எமது நிலையத்தின் பால் உற்பத்தி 17 லிட்டரில் இருந்து 400 லிட்டராக உயர்ந்தது.

இதன் பின்பு D.R.D.A. திட்டத்தின் கீழ் மேற்படி 80 மாடுகளுக்கும் மானியம் கோரி விண்ணப்பித்தோம். SC வகுப்பினர்களுக்கு 1500/- மானியமும் BC மற்றும் வகுப்பினருக்கு ரூ.800/- மானியமும் கொடுக்கப்பட்டது. இதனால் மேலும் மேலும் சங்கம் முன்னேறவும் மக்கள் மத்தியில் நம்பிக்கையும் ஏற்பட்டு முன்னேற்றப் பாதையில் முன்னேறி சென்று கொண்டிருந்த நிலையத்தை 11-2-82ம் தேதி முதல் தமிழக அரசின் அங்கீகாரத்துடன் கொளப்பள்ளி விவசாய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் வரையறுக்கப் பட்டும் இயங்குகின்றது. தற்போது எமது சங்கம் வருடத்திற்கு 1,70,000லிட்டருக்கு மேல் பால் உற்பத்தி செய்து வருகின்றது. எமது சங்கத்தின் உற்பத்தியாளர் மாதாந்திரம் சராசரி ரூ. 600/- வருமானம் பெறுகின்றார்கள்.

தற்போது எமது சங்கத்தில் நிரந்தர பணியாளர்களாக செயலாளர், பால் விநியோகஸ்தர் (கறவை மாடுகளுக்கு கிளை யூட்டும் பயிற்சி பெற்றவர்) ஒரு U.L.W மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய நான்கு பேர்கள் பணிபுரிகின்றார்கள். இவர்கள் அனைவரும் தாயகம் திரும்பியவர்களாகும். என்பதனை பெருமையுடன் எடுத்துரைக்கின்றோம். மேலும், எமது சங்கம் விரிவடையவும் தாயகம்திரும்பியோர் நலம் பெற்று நன்கு தங்களுடைய வாழ்வை அமைத்துக் கொள்ளவும் திட்டமிட்டுள்ளோம். எமக்கு அரசு மேலும் உதவி செய்தால் அபிவிருத்தி அடைய ஏதுவாக இருக்கும் என உறுதிக் கூறுகின்றோம்.

**நிர்வாக உறுப்பினர்கள் :**

1. T. பாலகிருஷ்ணன், தலைவர் 2) M.S. சிவகாமி உப தலைவர் 3) R.முருகையாஇயக்குநர் 4) S.கதிரேசன், இயக்குநர் 5) M.U ராமசாமி, இயக்குநர் 6) ந ராமலிங்கம் இயக்குனர் 7) U.S. ஜோன், இயக்குனர் 8) K. பெரியசாமி, இயக்னர் 9)M சிவசண்முகம், இயக்குனர்

இன்று நாங்கள் தாயகம் திரும்பியோர்களில்— கூட்டிறவுடன் வாழ்ந்துக் காட்டுவதில் முன்மாதிரியாக விள்ங்குகிறோம்.

பொங்கலோ பொங்கல் என்று பொங்கி மகிழும் தாயகம் திரும்பியோர்கள் இதை முன் மாதிரியாகக் கொண்டு கூட்டுறவு அடிப்படையில் சுயமாக இயக்கி முன்னேற வேண்டுமென்று எங்கள் சங்கத்தின் சார்பில் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். °°

## சென்ற விடமெல்லாம்

# கொடைகானல் மலை பகுதியில் குடியமர்த்தப்பட்டோரின் நிலை !

இலங்கை இந்திய ஒப்பந்தப் படி தாயகம் திரும்பியுள்ள இலங்கைத் தமிழர்கள் (வம்சாவளி) தங்களின் ஒப்பந்தப்படி குடும்ப அட்டையில் குறிப்பிட்டுள்ளபடி வியாபாரகடன், விவசாயம், தொழில் என்ற ரீதியிலே இந்தியாவின் பல பகுதிகளில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

இதுபோன்ற 1983-ம் ஆண்டு ஜூலையில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் பின்னர் தாயகம் திரும்பியவர்களில் விவசாயத்திற்காக எழுதி வந்த சுமார் 100 குடும்பங்கள் கோடைக்கானல் பகுதியில் உள்ள கூக்கல், குண்டுப்பட்டி, பழம்புத்தூர், புதுப்புத்தூர் ஆகிய பகுதிகளில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் இருக்கும் பகுதிக்குச் செல்வதற்கு கொடைக்கானலில் இருந்து 18கி.மீ. தூரத்தில உள்ள பூம்பாறை என்ற ஊரிலே பஸ்ஸைவிட்டு இறங்கிய பின்னர் மலைகளின் மேலும் கீழுமாக ஏறி இறங்கி சுமார் 7 முதல் 10கி.மீ. தூரம் நடையில் செல்ல வேண்டி இருக்கின்றது. (வேறு எந்த போக்குவரத்து வசதியும் கிடையாது) போக்குவரத்துப் பாதைகள் சீரமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றாலும் முடிவடைய இன்னமும் 5 வருடங்களுக்கு மேல் காலதாமதம் ஏற்படலாம் என்றே சொல்லப்படுகின்றது.

ஜில்லென்ற குளிர் 24 மணி நேரமும் உள்ள இந்தப்பகுதியில் பூர்வீக குடிமக்களே பற்களை ஒன்றுடன் ஒன்று மோதவிட்டுப் பேசும் நிலையில் உள்ளபோது தாயகம் திரும்பியோர்களின் நிலை எப்படி இருக்கும்...!

குண்டுப்பட்டி கிராமத்தை நெருங்கியதும் பல ஓலைக்குடிசைகள் கண்களில் தென்பட்டன, அனைவரும் போர்வைகளுடனும் சொட்டர்களுடனும் காட்சியளித்தார்கள். அவர்களின் முகங்கள் பணியின் கொடுமையால் வாடி வதங்கி (சில பேருக்கு தோல் உரித்தும்) இருந்தது வருத்தத்தைக் கொடுத்தது. அருகில் நின்று கொண்டிருந்த வயோதிகரானாலும் நல்ல உடற்கட்டுடன் இருந்த சித்திரம் என்ற தாயகம் திரும்பியவரை அணுகினோம்.

அவர் அப்பகுதி வாழ்க்கையைப் பற்றி விவரிக்க ஆரம்பித்தார்.

ஐயா, இலங்கையில் கல்வி அமைச்சர் காரியாலயத்தில் தொழில் புரிந்த நான் எனது 13 குழந்தைகளுடன் எந்தவித சிரமமுமில்லாமல் வசித்து வந்த போதுதான் 1983-ம் ஆண்டு இனக்கலவரம் தோன்றியது. 1956ம் ஆண்டில் இருந்து தொடரும் இனக்கலவரத்தால் இலங்கை அரசின் மேல் நம்பிக்கை இழந்து 1974-ம் ஆண்டு நான் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு விண்ணப்பித்திருந்தேன்.

1982-ம் ஆண்டு ஜூலை கலவரத்தின் பின்னர் மிகுந்த சிரமப்பட்டு எனது பழைய ஒப்பந்த இலக்கத்தை வைத்து ஒப்பந்த பாஸ்போட் பெற்று 19-1-84-ம் தேதி திரும்பி முகாமில் இருந்து இராமேஸ்வரம் அனுப்பப்பட்டு அங்கிருந்து 20-1-84-ம் தேதி திரும்பி முகாமுக்கு கொண்டு போகப்பட்டு, அங்கு பராமரிப்பின் பின்னர். 16-2-84-ம் தேதி எங்கள் குடும்பத்துடன் சுமார் 18 குடும்பங்களை திருச்சியில் இருந்து கொடைகானலுக்கு அனுப்பிவிட்டார்கள். கொடைகானல் வந்து உணவுக்கு கூட வழியின்றி சிரமப்பட்டோம் திருச்சியில் கெட்டதற்கு கொடைக்கானலில் கிடைக்கும்

## நாடக நித்திலம்

என்ற பதில் கிடைக்கவே அதை நம்பினோம் அதிலும் ஏமாற்றமே!

20-2-84-ம் தேதி இரவு 7 மணியளவில் ஊராட்சி ஒன்றிய லாரியில் எங்கள் 18 குடும்பங்களையும் ஏற்றி இரவு 2மணியளவில் குதிரையாறு என்ற இடத்தில் இறக்கி அங்கிருந்து அந்த இரவிலேயே நடக்க வைத்து இப்பகுதிக்கு கூட்டி வந்தார்கள். அன்றைய குளிரில் மனைவி மக்களுடன் நாம்பட்ட பாடு, கண்ணீர் வடித்தார் முதியவர். அவர் அருகில் இருந்த ராஜேந்திரன், மாணிக்கம்பிள்ளை போன்றவர்களும் மிகவும் சோகத்துடன் அந்தக்கதையை ஏன் கேட்கிறீங்க; என்று துயர கீதம் பாடினார்கள்.

பெரியவர் தொடர்ந்தார். நாங்கள் இலங்கையிலிருந்து (பறிபோனது போக மீதி) கொண்டுவந்த பொருட்களைக் கொண்டுவந்து இங்கே கொடுக்க கூட எங்களிடமே குடும்பம் ஒன்றுக்கு 75 ரூபா வீதம் வாங்கினார்கள். அதை திருச்சி முகாமுக்கு எழுதி பெற்றுக் கொடுப்பதாக கூறினார்கள். இன்று வரை ஏதும் நடக்கவில்லை. எந்த பதிலும் இல்லை.

நாங்கள் இங்கு விவசாயத்திற்காக வந்தோம். எங்கள் குடிசைகளைப் பாருங்கள். இது தான் வீடாம், எங்கள் குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்க எத்தனைமுறை தாலுகா அலுவலகம் (கொடைக்கானல்) அலைந்திருப்போம் தெரியுமா? இங்கே உள்ளே அலுவலர்கள் எங்களுக்கு கொடுக்கும் மரியாதை? — மிகவும் மனம் நொந்து கொண்டார்.

காணி அளந்து கொடுக்க எத்தனை மாதம் எடுத்தது தெரியுமோ- அதிலும் ஒப்பந்தப்படி வந்தவர்களுக்குமேட்டு நிலமும் (வருடம் ஒன்று வெள்ளாமை) லஞ்சம் கொடுக்கும் உள்ளூர் வைசிகளுக்கு பள்ளமான பகுதி நிலமும் (வருடம் மூன்று வெள்ளாமை) கொடுக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் நாங்கள் யாருக்கும் லஞ்சம் கொடுத்தது கிடையாது. இங்கு அப்படி கொடுக்கமாட்டோம். கொடுக்கும் நிலையிலும் நாங்கள் இல்லை என்ற வார்த்தையில் உறுதி தெரிந்தது. அப்பகுதி மக்கள் அவரிடம் ஆளுக்கொருவராக தங்கள் துயரங்களைக் கொட்டிக் குவித்தார்கள். அவைகளை எழுதி முடிக்க பேனா மைக்கு பதிலாக கண்ணீரைத் தான் சிந்தவேண்டி இருக்கிறது.

எங்களுக்கு உதவி செய்ய மைராடா என்று நிறுவனம் இருக்கிறது என்று கூறினார்கள். அது பல உதவிகளைச் செய்வதாக வாக்கு கொடுத்து எங்களை ஏமாற்றியது தான் மிச்சம். நாங்கள் கேள்விகள் கேட்டால் அதிகப்பிரசங்கிகள் என்று எங்களை பழிவாங்கவே திட்டமிட்டிருக்கிறது.

(15-ம் பக்கம் பார்க்கவும்)

# இறுதித் தீர்ப்பு

கடந்து முடிந்த 1985ல் இலங்கை மலையகத் தமிழர்களின் அடிப்படை குடியுரிமைப் பிரச்சினையும் அவர்கள் நவீன ஒப்பந்த அகதிகளாக நாடு கடத்தப்படும் பிரச்சனையும் மீண்டும் புத்துயிர்பெற்று அரசியல் விமர்சனத்திற்கும் புனராலோசனைக்கும் உட்படுத்தப்பட்டிருப்பது மிக வரவேற்கத் தக்க அரசியல் திருப்பமாகும்.

1948ல் செய்யப்பட்ட இனவாத குடிஉரிமைச் சட்டத்தினால் மலையகத் தமிழர்களின் அடிப்படை குடி உரிமை பறிக்கப்பட்டது மிகப்பெரிய அநீதி.

அதை எதிர்த்து சில மாதங்களில் பிசுபிசுத்து விட்ட ஒரு சத்தியாக்கிரகப் போராட்டத்தைவிட, வேறெந்தவித போராட்டமோ, கொந்தளிப்போ ஏற்படாதது. சரித்திரமே இழைத்த சதி.

இலங்கை வாழ்சிங்கள தமிழ் மக்களின் அலட்சிய மனோபாவம் சர்வதேச அரசியல் அரங்கில் இந்த அநீதியை மொழிவார் கூட எவருமிருக்கவில்லை இந்திய அரசின் கையாலாகத் தனம் மலையகத் தமிழ்த் தலைவர்களின் திறங்கெட்ட போக்கு 15 ஆண்டுகளாக மலையகத் தமிழர்கள் இலங்கைத் தோட்டங்களில் கொத்தடிமைகள்

1964 சிரிமாவோ பண்டாரநாயகாவின் இனவாத அரசியல் ஆர்வத்தாலும் நீங்காப் பிரச்சனையாக 15 ஆண்டுகளுக்கு மேலா குளிரூட்டப்பட்டுவிட்டதாலும் இமயமலையில் சீனத்து துப்பாக்கிகள் வெடித்த வேட்டுக்களால் சூடடைந்த இந்தியா, இந்தப் பிரச்சனையை உருக வைத்தது. சிங்களவர்கள் எந்தவித நியாய உணர்வுமின்றி மலை அக்கத்தமிழர்களை அவர்கள் பண்படுத்திப் பயிரிட்ட மண்ணிலிருந்து விரட்ட வழிவகுத்தனர்.

ஆனால் மனித இனத்தின் நியாய உணர்வுகள் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தன. உரிமைப்பறிப்பின் கொடுமைகள் உலகிற்கு உணர்த்தப்பட்டன. மனித உரிமை உணர்வுகள் சீறின.

எனினும்,

ஐந்து லட்சம் மக்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டார்கள். இந்திய மண்ணின் ஏழைப்பட்டாளத்தில் இணைந்து விட்டார்கள்,

இலங்கையிலோ,

சிலருக்கு வேண்டா வெறுப்பாகக் குடியுரிமை. பலருக்குத் தொடர்ந்து கொந்தடிமை. ஒப்பந்தங்களின் காலவரையறை கழிந்த பின்னரும் நாடு கடத்தல் தொடர்ந்து கொண்டே வந்தது!

இது அநீதி, சட்ட விரோதம் என்று நியாய உணர்வுகள் கொக்கரித்தன.

இறைவன் விழித்துக்கொண்டானோ அல்லது அரசுகளின் மூடிய இமைகள் திறந்தனவோ?

இலங்கையின் இனவெறி 1983ல் தமிழர்களை வகைதொகையின்றி கொலை செய்ய ஆரம்பித்தது. வடக்கு, கிழக்கு மத்திய மாநில பேதமின்றி கோரக் கொலைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள்!

ஜுலை 1983ல் ஒரு வரலாற்றுத்திருப்பம் ஏற்பட்டது. சிங்கள தமிழ் உறவுகள் பொருத்த முடியாத வகையில் முறிந்தன. இந்தியாவிற்கு இலட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் வந்தனர்.

1938 முதல் 1988 வரை இந்தியாவிற்கு வந்தவர்கள் இந்தியத்தமிழர் அகதிகள்.

1983 முதல் வந்து குவிபவர்கள் இலங்கைத் தமிழர் அகதிகள்.

தமிழர்களை அகதிகளாக்கி இந்தியாவிற்கு விரட்டி விடுதல் சிங்களவர்கள் கற்றுக்கொண்ட அரசியல் கலை.

இதற்கு முற்றுப்புள்ளி வைப்பது எப்போது?

தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து நின்றதால், மலையகத்தமிழர்களை நாடு கடத்தும் படலம் முடிந்தது

## "பிறைசூடி"

சிங்கள வெறியர்களுக்கு இது பொறுக்கவில்லை. விமானத்திலாவது நாடு கடத்துவோம் என்கிறார்கள். தமிழர்களை அகற்றிவிடுவதில் இலங்கைக்கு எத்தனை ஆர்வம்? 84000 பேருக்கு விமான மூலம் நாடு கடத்தல்!

இந்தியா இலங்கையை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டது

"நாடு கடத்தல் நடக்கக் கூடாது,

நாடுதிரும்புதல் நடக்கவேண்டும்." - இந்தியாவின் உறுதி.

நியாயஉணர்வுகள் கைதட்டி ஆரவாரிக்கின்றன.

நேருவின் வழித் தோன்றல் ராஜீவ்.

நேருவின் நியாய உணர்கள் ராஜீவ்.

காந்தியின் வழியாக செயலாக்கம் பெருகின்றன.

நாம் புளகாங்கிதம் அடைந்துள்ளோம்.

அப்பாடா! இருபது ஆண்டுகளாக வெந்து வேதனைப் பட்டுக் கொண்டிருந்த கொடுமைக்கு முற்றுப்புள்ளி,

அநீதிக்குச் சாவு மணி

இனவெறிக்கு இடியோசை.

வரலாற்றின் வாக்குறுதிகள்!

புதிய சகாப்தத்தின் பொன்மொழிகள்.

நீதிதேவனின் தீர்ப்பு.

நாடு கடத்தல் நடக்க கூடாது.

இலங்கையின் இனப் பிரச்சனைக்கு இதுதான் இறுதித் தீர்ப்பு.

ஆனால்,

தொண்டமானுக்கு இது புரியவில்லையே? நாடுகடத்தலை 1968ல் எதிர்த்த மனிதர் 1986ல் இவர்கள் நாடுகடத்தப் படத்தான் வேண்டும் என்று பிதற்றுகிறாரே. புதவிப்பித்தா? புத்தி மாறாட்டமா? எது காரணம்? அழிவு பற்றிப் பேசுகிறாரே, யாருக்கு அழிவு? தனி மனிதர்கள் அழியலாம். இனங்கள் அழியாது. நாம் நம்புகிறோம்.

84000 இந்தியக் குடியுரிமை பெற்றவர்கள் வேலை யற்றிருக்கிறார்களா? அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தொடர்ந்து தரவேண்டும். இது ஒரு ஒப்பந்த நிபந்தனை. இதனை வலியுறுத்த வக்கில்லாமல் ஜயவர்த்தனா பாணியில் மலையகத் தமிழர்கள் அழிந்து விடுவார்கள் என்ற அபத்தக் குரலெழுப்புவர்களுக்கு நாம் என்ன சொல்லலாம்?

புதியவரலாறு கட்டியம் கூறுகிறது, O

# இன்றைய தேவை எ

‘பிறைசூடி’ யின் கட்டுரைக்கு பதிலாக இந்த கட்டுரையை திரு. கணபதி எழுதுகிறார். இது இந்த விவாதத்தை ஆரம்பித்து வைக்கிறது. எவரும் இதில் கலந்துக் கொள்ளலாம். எழுதுகிறவர்கள் மிகச் சுருக்கமான மக்கள் மறுவாழ்வில் ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் எழுதவும்.

- ஆசிரியர்

## கணபதி

இதனை எழுதுகிறேன் என்பதனால் நான் தொண்டமானை ஆதரிக்கிறேன் என்று அர்த்தமல்ல; தொண்டமானுக்கு வக்காலத்து வாங்க பரிந்து கொண்டு வந்திருக்கிறேன் என்றும் பொருளல்ல. மாறாக, தொண்டமானை சாடிடும் பிறைசூடி போன்றவர்களின் கருத்துக்களை மறுத்துரைப்பதும் என் நோக்கமல்ல.

தொண்டமானை விமர்சனத்திற்கோ, சாடுதலுக்கோ அப்பாற்பட்டவர் அல்லதான். அப்படியானால், எதற்காக, எந்த நோக்கோடு இதனை எழுதுகின்றேன்?

‘பிறைசூடி’ எதற்காக? ஏன்? இந்தக் கட்டுரையை எழுதினார்? பிறைசூடி போன்றவர்களுக்கும், தொண்டமானுக்கும் இருக்கும் எந்த வகை உணர்வு இதை எழுதத்தூண்டியது என்பது போன்ற அனாவசியமான, சில்லறைப் பிரச்சினைகளில் தலையிட்டு என் தலையைப் பிய்த்துக் கொள்வதற்காகவும் நான் இதனை எழுதவில்லை.

ஆனால், பிறைசூடியின் கட்டுரையில் மிகப் பிரதானமான ஒரு கேள்விக்கான பதில் உள்ளது. “மலையக மக்களின்” எதிர்காலம் என்ற இருண்ட கேள்விக்குறிக்கு விடைதேடிச் செல்லும் பாதையைக் காட்டுகின்ற பதில் அது

பிறைசூடி வைக்கின்ற வாதங்கள் அல்லது பிரதிவாதங்கள், அவரது முடிவுகள் பற்றி ஒரு ‘ஆரோக்கியமான விவாதத்தை’ கோருவதே என் அடிப்படை நோக்கம்.

பிறைசூடி கூறுகிறார், “... வரலாற்றுப் போக்கில் எவருடைய ஒத்தாசையும் இன்றி இவ்விரு தமிழ்ப் பிரச்சினைகளும் ஒன்றாக இணைந்து விட்டன. இவற்றைப் பிரிக்க முடியாது.” இது மேலோட்டமாக கூறப்பட்ட கருத்தாக எடுத்துக் கொள்வதற்கில்லை. ஏனெனில் இதையொட்டித்தான் பிறைசூடியின் மையக் கருத்தும் முடிவும் ஆட்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மற்றைய பல இன்றைய காலத்திய இலங்கைத் தமிழ் பிரச்சினை பற்றிய ஆய்வாளர்கள் மற்றும் எழுத்தாளர்களின் கருத்திலிருந்து இவர் மாறுபட்ட ஒரு ‘தனி வழியை’ காட்டுகிறார். இந்த கருத்தை கூறும் பிறைசூடியே இன்னொரு இடத்தில் கூறுவது இது.

“....அவர்கள் இன்றும் தமிழக மக்கள் என்ற உணர்வுகளை இழக்காத மக்கள்.” இது எதைக் காட்டுகிறது. வேலுப்பிள்ளையை மேற்கோள் காட்டுவோமேயானால் “இவர்களது (மலையக மக்களது) சமூக பழக்க வழக்கங்கள், இந்துக்களுடையதாய் சராம்சத்தில் இருந்தாலும், யாழ்ப்பாண மட்டக்களப்பு திருகோணமலையில் வாழும் அதே சமயமக்களிடமிருந்து மாறுபட்டவையாயிருக்கின்றன.”, என்கிறார்.

எனவே பிறைசூடி தான் மேற்கொண்டிருக்கும் மையக் கருத்துக்கு காரண காரியங்களை விளக்க வேண்டும். தான் பிறரிடமிருந்து மாறுவதற்கான காரணத்தை சொல்ல வேண்டிய கடமையும் அவருக்குண்டு.

ஏன் நான் இவற்றைக் கோருகிறேன்? மேலோட்டமாக எடுக்கப்படும் எந்த முடிவுகளும் ஒரு நீண்ட கால நோக்கிலும், அடிப்படையிலும் ஒன்று நிராகரிக்கப்படும் அல்லது ஏற்றுக் கொள்ளப்படுமேயாயின் ஏற்றுகொள்பவர்களை ஒரு சமூகமாயிருந்தாலும் கூட, துன்ப துயரத்தில் ஆழ்த்திவிடும் வல்லமை படைத்தவை. இந்த அடிப்படையில் பிறைசூடியின் கருத்துக்கள் மேலோட்டமானவையாக இருக்க முடியாது.

இதைவிட மேலாக, இன்னொரு அடிப்படைக் கேள்வியையும் நான் எழுப்ப ஆவல் கொண்டுள்ளேன். இந்த முடிவுகள் - மலையக மக்களின் எதிர் காலம் என்ற இருண்ட கேள்விக்கு காட்டப் போகின்ற பாதை எது?

மலையகத்தவர்களின் வாழ்க்கையில் ஒரு பிரதானப் பங்கு தொழிற்சங்க இயக்கத்தில், மலையகத்தைப் பொறுத்மட்டில், ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான குணசிங்கா பின்னர் ‘இன வாதத்திடம்’ சரணடைந்தும் மலையகத் தலைவர்கள் ‘இன வாதத்தை’ எடுத்துச் சென்றதும் செல்வதும் இதனை மலையகமக்கள் ஏற்றுக்கொண்டார்களா? இல்லையா என்பது பிரிதொரு கேள்வி - இனவாதத்தின்’ பயங்கரத் தன்மையை எடுத்துக் காட்டுபவனவையாகும்.

இந்த ‘இனவாதம்’ தொடர்ந்து மலையக மக்களுக்கு காட்டப் பட போகின்றதா? என்பது ஓர் அடிப்படைப் பிரச்சினையாகும்.

ஏன்? இன்றைய **மலையக மக்களின் இருப்பு ஒரு காரணி** யாகும். மலையக மக்கள் தெரிந்தோ தெரியாமலோ சிங்களப் பகுதிகளால் சூழப்பட்டிருக்கின்றனர். எனவே, ‘இனவாதத் தீர்வு’ மலையக மக்களைப் பொறுத்த மட்டில் எந்த அளவு சரியானது?

### இலங்கை மலையக மக்கள் பிரச்சனைக்கு தீர்வு இனவாத அடிப்படையா? அல்லது வேறு வழியா?

இந்தக் கேள்வியை, மலையகத் தமிழர்களின் கடந்த கால நிலைப்பாடு உறுதி படுத்தும். ஏனெனில், கடந்த காலங்களில் மலையக மக்களுக்கு காட்டப்பட்டு வந்த இனவாத அரசியலை மலையக **மக்கள் எந்த** அளவிற்கு ஏற்றுக் கொண்டுள்ளனர்? என்பது இந்தப் பிரச்சினையின் தீர்விற்கு ஒரு முக்கிய அளவு கோலாகும். இனவாதத்தலைவர்கள் தொடர்ந்த உறுதியான வழிகாட்டுதலை கொடுத்துள்ளனரா?

பிறைசூடி போன்றவர்களுக் களுக்கும், மலையகத் தமிழ

# ...ர்னா ?

களின் பாதுகாப்பு முக்கியத்து வம் தெரியாத ஒன்றல்ல. குறிப்பாக கொழும்பு மாநகரிலும், பிற மலையக நகர்களிலும் இருந்த பலர் இலங்கையை விட்டு வெளியேறியதற்கு பிரதான காரணம் அவர்களது உயிருக்கும் உடமைக்கும் இல்லாத பாதுகாப்பு காரணமே.

எனவே, மலையக மக்களின் உயிருக்கும் உடமைக்குமான பாதுகாப்பு இன்றைய நிலையில் அதிமுக்கியத்தும் உடையது. இந்த வகையில், இனவாதத் தீர்வு எந்த அளவிற்கு சரியானது என்பது தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டாக வேண்டும்.

இவை சரியாகத் தீர்மானிக்கப்பட வேண்டுமானால் இந்தியத் தமிழர்களின் [பிரதானமாக மலையக மக்கள்] "தேசியம்" பற்றிய ஒரு தெளிவான கண்ணோட்டம் தேவை. இந்த வகையில், மலையக சமூகத்தின் உயிரோட்டமான, நிலையான, நெகிழ்ச்சியற்ற சமூகம் கம் அல்லது இல்லை என்பது ஆராயப்பட்டு உறுதிச் செய்யப்பட வேண்டும். இப்படி சொல்வதற்கான வரலாற்றுக்காரணங்களும் இலங்கையின் மற்றைய சமூக உருவாக்கங்களோடு வைத்து ஆராயப்பட வேண்டும்.

எனவேதான், இந்த அடிப்படையில் நான் கீழ்க்கண்ட அடிப்படை வினாக்களை எழுப்புகிறேன்.

**1. இந்தியத் தமிழர்கள்-மலையக மக்கள் ஒரு தனித் தேசிய இனமா? அல்லது தேசியமா? அல்லது இனக்குழுவா? இந்தச்சமூகம், ஒரு நிலையான நெகிழ்வற்ற சமூகமா?**

2. மலையக மக்களின் வாழ்நிலை தற்போது எவ்வாறுள்ளது? அவர்களது பாதுகாப்

(15-ம் பக்கம் பார்க்க)

# அமைதிப் புறா !

'தேனூரான்'



இந்த
புறாவுக்கு
ஏனிந்த
சோதனை?

சிறகடித்து
பறக்கத் துடிக்கும்
இதை
மயக்கியது
யார் ?

வேட்டையாடத்
துடிக்கும்
வல்லூறுகள்...?

அவை
மூச்சை அடக்கப்
விஷப்புகை
பரப்பும் !
உயரப்
பறக்காதிருக்க
வலையைப்
பின்னும் !
தத்தித்
தவழாதிருக்க
கண்ணிகள்
வைக்கும் !
கண்ணாய்
இருந்து
காவல்
பண்ணும்

அதன்
சிறகை ஒடித்து
கால்களை முறித்து
உதிரம் குடிக்க
காலம்
பார்க்கும் !
அதன்
சதையைப்
பிய்த்து
சுவைத்துண்ண
சமயம் பார்க்கும்

இந்த
சமாதானப்
புறாவுக்கு

ஏனிந்த
வேதனை ?

உயரப்
பறந்தால்
கழுகுகள்
வலையம்...;
தத்தித்தத்தி
கீழே
நகர்ந்தால்
கரடிகள்
கூட்டம்;
இன்னும்....
இன்னும்...

சோதனை
மிகுந்தது
வேதனை
பிறந்தது
அமைதி
அழிந்தது

தனது நாடு
தனது இனம்
தனது
மொழி, மதம்
நிறம் என்றே
பிறரது
உரிமை மறுக்கிறது
உயிரைக் குடிக்கிறது !

உறவையும்
உடமையை
உயிரையும்
நாட்டையும்
இழந்து
அகதிகளாக
அமைதி இழந்தார்
மக்கள்
எங்கும் !

அமைதிக்காக
உலகம்
அழுகிறது !
முதலைக் கண்ணீர்
குண்டுக்குண்டாய்
பொழிகிறது !

அமைதிக்காக
ஐக்கிய நாடுகள்
காமன் வெல்த்துகள்
அணிசேரா நாடுகள்
தென்கிழக்காசியா
மேற்கும் கிழக்கும்
தெற்கும்
என்று
ஐக்கியம்
பேசுது

அமைதிக்காக
ஆளும் வர்க்கம்
ஏகாதிபத்தியம்
இன வெறி
நிற வெறி
மத வெறி
நாடுகள்
அரசுகள்
குரலும் கொடுக்கிறது !

குரல்கள்
என்னவோ
குழலால்
மாறுகிறது

போர் நிறுத்தம
யுத்த மறுப்பு
மீறப்படுகிறது!
ஆயுதக் குறைப்பு
உற்பத்தி நிறுத்தம்
அண்டை நாட்டுக்கோ
விற்பனைகள்!
பாரை அழிக்கும்
அணு ஆயுத
தடைகள்
அணுக்குண்டு
வெடித்தே
சோதனைகள் !
அண்டம் கடந்த
ஆராய்ச்சி
ஏவுக்கணைகள்
ராக்கட்கள்
நட்சத்திர போரும்
முஷ்டி உயர்த்துகிறது!
குழையோ
நடுங்கிறது.

உலகை
காக்கும்
அமைதியைத்
தடுக்கும்
சாகசங்கள்
தந்திரங்கள்
பேச்சுகள்
கூட்டுகள்....

அமைதிப்
புறாவோ
குற்றுயிராய்க்
கிடக்கிறது!

## வரப் பெற்றோம்

# திறந்தவெளிச் சிறைகள்

சிறுகதை தொகுதி

ஆசிரியர்:
**சி. பன்னீர்செல்வம்**

வெளியீடு :
**ஜே.ஜே. பதிப்பகம்**
**76பி, என்.ஜி.ஓ. காலனி,**
**திண்டுக்கல்-624009**

**விலை : ரூ. 12/-**

பன்னிரண்டு முத்தான சிறு கதைகளின் தொகுதி இது.

அத்தனைக் கதைகளுமே அன்றாட பிரச்சனைகளை- இன்றைய வாழ்க்கையைச் சித்தரிக்கின்றன. இதில் வரும் கதை மாந்தர்கள் வானத்தில் சிறகடித்துப் பறக்கும் கனவு மாந்தர்கள் அல்ல. கண் முன்னே இந்த பூமியில் நடமாடும் மனித ஜீவன்களே.

இன்றைய சமூகத்தில் கொழுந்து விட்டெரியும் சாதியக் கொடுமைகள், வரதட்சணை, சொத்துரிமை, பெண்ணடிமை அரசியல் மோசடி போன்ற பிரச்சனைகளை இக் கதைகள் சித்தரிக்கின்றன.

சாதாரண மனிதர்களானாலும் அவர்களின் சிலசெயல்கள் அவர்களை உயர்த்திவிடுகின்றன. கொடுமை செய்தவர்களையும் ஆபத்திலிருந்து காப்பாற்றும் ராசா, ரெங்கன், செவந்தி, கந்தசாமி ஆகிய கதை மாந்தர்கள் மனிதநேயத்திற்கு நம்பிக்கையூட்டுகிறார்கள்.

குடித்தொழில் என்ற பெயரால் சமூகத்தில் நடத்தப்படும் கொத்தடிமைக் கொடுமைகளிலிருந்து விடுபடத்துடிக்கும் மக்களின் நாயகர்களாக இக்கதைகளில் வரும் சாமிநாதன், செல்லாத்தாள், பெரியதம்பி நிற்கிறார்கள்.

இன்னும் சீர்வரிசையை எதிர்க்கும், பழமையைஉதரும், அரசியல் போலிகளை அம்பலப்படுத்தும், வழி வழி வழக்கங்களை உடைத்தெறியும் பாத்திரங்கள் உயர் துடிப்பானவை.

'துறவி' என்கிற கதை இலங்கையில் இன்னும் எரியும் இனக்கொலைகளை சித்தரிக்கிறது. இந்த கதை ஆரம்பகாலத்தில் தமிழ் மக்களுக்கும் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களுக்கும் கிராமப்புறத்து சிங்கள மக்களுக்கும் மத்தியில் இருந்த அன்னியோன்ய உறவுகள்- சௌஜன்ய நிலை எப்படி காலப்போக்கில் அரசியல்வாதிகளால், இனத்துவேஷிகளால் சிதைந்து இனக்கொலைகளுக்கு வித்திருக்கின்றது என்பதை சித்தரிக்கின்றது. பிறந்தது முதலே தோட்டத் தொழிலாளர்களை அறிந்திருந்த அவர்கள் மத்தியில் வாழ்ந்திருந்த ஒரு பௌத்த துறவு கொலைகள், கொள்ளைகள் நடப்பது கண்டு குமுறுகிறார்- தனது காவியையே கழற்றி எறிகிறார். தனது சக்களத்தி மகனை கொடுமை செய்யும் டிங்கிரி மெனிக்கா இனக்கொலைகள் நடக்கும் போது "எங்களாலே அஞ்சு தமிழர்களைத்தான் உயிர் காப்பாத்த முடிந்தது" என்று கலங்கும் போது அவள் காவியைக் கலைத்தெறிந்த துறவி தர்மபாலாவைவிட உயர்ந்துநிற்கிறார். இப்படி ஆசிரியர் கதை சொல்லும் விதமும், கதை மாந்தர்களை உருவகிக்கும் திறனும் அவருக்கு கைவரும் கலையாக அமைந்திருக்கிறது.

நூலாசிரியர் இலங்கையில் பிறந்தவர் - இலங்கை மலையக எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். பல பரிசுகளை பெற்ற இவர் தமது மாணவ பருவத்திலே இலங்கை சாகித்திய மண்டல பரிசைத் தட்டிக் கொண்டவர். 'தாயகம் திரும்பிய'வரான இவர் எழுத்துப்பணியில் ஈடுபட்டுள்ளார். இது இவரது முதல் நூல் என்றாலும் முதல் தரப்படைப்புகளில் இடம் பெறத்தக்கது. **-ஏ. பி.**

---

# 1985 ஆம் ஆண்டில் மறக்க முடியாதவை

ஜனவரி

**14** - எத்தியோப்பியாவில் நடந்த ரயில் விபத்தில் 418 பேர் பலி ஆனார்கள்.

**26** - அமெரிக்கா உளவு செயற்கை கோளை வானில் விட்டது.

**28** - அணு ஆயுத ஒழிப்புக்கான ஆறு தேச மகாநாடு டெல்லியில் நடைபெற்றது.

பெப்ரவரி

லண்டனில் இந்திய தூதுவரகத்தில் அதிகாரியாக இருந்த மாத்ரேயை கொன்றவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டது.

**4** - சிலி நாட்டில் பூகம்பத்துக்கு 150 பேர் பலி

**10** - சோவியத் அதிபர் செர்னன்கோ மரணமானார்.

**11** - மிக்கேயில் கோர்பசேவ் புதிய அதிபராக தெரிவு செய்யப் பட்டார்.

ஏப்ரல்

**7** - சூடானில் ரர்ணுவ புரட்சி

ஜூன்

**3** - ஏர் இந்தியா விமான மொன்று விபத்து ஏற்பட்டு அட்லாண்டிக் கடலில் விழுந்ததில் 329 பேர் மரணம் அடைந்தனர்.

ஜூலை

**2** - சோவியத்தின் ஜனாதிபதியாக குரோமியகோவ் தெரிவு செய்யப்பட்டார்.

**28** - உகண்டாவில் ராணுவ புரட்சி.

ஆகஸ்ட்

**8** - ஜப்பானில் நடந்த விமான விபத்தில் 520 பேர் பலியானவர்கள்

**11** - நைஜீரியாவில் ராணுவ புரட்சி நடந்தது.

செப்டம்பர்

**12** - மெக்ஸிகோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 10,000 பேர் உயிர் இழந்தனர்.

அக்டோபர்

**8** - பாலஸ்தீனிய அதிரடிப் படையினர். மத்திய தரைக்கடலில் இத்தாலிய கப்பலை கைப் பற்றினார்.

**16** - பஹமாஸில் காமன் வெல்த் மாநாடு தொடங்கியது.

**17** - பாக்கிஸ்தான் அதிபராக ஜியா மேலும் ஐந்து ஆண்டுகள் நீடிக்க மக்கள் தீர்ப்பு.

**18** - தென்னாபிரிக்க கருப்பினக் கவிஞன் மொலாயஸ் தூக்கி விடப்பட்டான்.

**24** - ஐக்கிய நாடுகள் சபையின் 40வது ஆண்டு நிறைவு விழா.

**31** - நட்சத்திர யுத்தகம் குறித்து அமெரிக்கா இங்கிலாந்து ஒப்பந்தம்.

நவம்பர்

**14** கொலம்பியாவில் எரிமலை வெடித்து 25,000 பேர் உயிர் இழந்தனர்.

**19** - ரீகன் - கோர்ப்பசேவ் ஜெனிவாவில் சந்திப்பு.

**25** - எகிப்தியவிமானம் கடத்

(16-ம் பக்கம் பார்க்க)

## அஸ்ஸாம் தேர்தல்:

# மாணவர் முதல்வரானார்!

மூன்று மாத காலத்திற்கு முன் மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'அஸ்ஸாம் கன பரிஷத்' கட்சி ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றியது. திறந்த வெளி மைதானத்தில் பொது மக்கள் முன்னிலையில் இளைஞர்கள் பதவி ஏற்றனர். மக்கள் பிரச்னைக்காக பல வருடங்கள் தொடர்ந்து போராடிய கல்லூரி மாணவர்கள் அம்மாநில மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளனர். கடந்த ஆறு வருடகால கிளர்ச்சியால் ஏற்பட்ட பின்னடைவுகளை சமாளிக்கும் பொறுப்பு புதிய அரசிற்கு உள்ளது.



மகந்தா புகான்

பள்ளி ஆசிரியரின் மகனான மகந்தா முதல்வராகியுள்ளார். இவருக்கு வயது 32. சட்டத் துறையில் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தவர். 1979-ல் மாணவர் யூனியன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் மகந்தா மிதவாதியாக செயல்பட்டவர். பலமுறை சிறை சென்றுள்ளார். மாணவர் விடுதி ஒன்றிலிருந்து முதல்வர் பங்களாவுக்கு குடியேறியவர் இந்தியாவிலேயே இவர்தான்

கன பரிஷத்தின் தலைமைப் பொதுச் செயலாளர் பிருகு குமார் புகான் அருணாசலப் பிரதேச நிர்வாகத்தில் ஓய்வு பெற்ற டிபுடி கமிஷனரின் மகனாவர். இவர் பிரெஞ்சு மொழி டிப்ளமா படித்து வந்தார் இவர் விடுதியில் மகந்தாவிற்கு எதிர் அறையில் இருந்தவர். புள்ளி விபரங்களோடு பேசுவதில் பெயர் பெற்றவர். இவருக்கு மகந்தாவை விட வயது குறைவு.

மகந்தாவும் புகானும் அனைத்து அஸ்ஸாம் மாணவர் யூனியனிலும் கனபரிஷத் தேர்தல் வெற்றியிலும் முதுகெலும்பாக செயல் பட்டவர்கள். இவர்களின் தலைமைக்கு கடுமையான எதிர்ப்பு இருந்ததே கிடையாது. அரசுடன் நடந்த பேச்சு வார்த்தைகளில் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட்டனர். இந்திராகாந்தி பேச்சு வார்த்தை நடந்த போது 'இரண்டு நிமிடம் போராட்டத்தில் மறைந்தவர்களுக்காக அனுமதி காக்க' என்று சொன்னவர்கள் இவர்களே. இந்திராவுடன் 22 முறைபேச்சு வார்த்தை நடத்தினர். பேச்சு வார்த்தைக்காக சென்ற மாணவர்களுக்கு நட்சத்திர ஓட்டல்களில் அறைகளும், சொகுசு கார்களும் அரசு ஏற்பாடு செய்திருந்ததை தேவையில்லை என ஒதுக்கியவர்கள்.

அஸ்ஸாம் பிரச்சினை சுதந்திரத்திற்கு முன்பே ஆரம்பமானது. 19ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் சுரண்டப்பட்ட இம்மாநிலம் தேயிலைக் குச்சிறந்த இடமாகும். தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்தவர்களுக்கு குறைந்த கூலி கொடுத்து ஏமாற்றினர். 1905ல் மேற்கு வங்கமும் கிழக்கு வங்கமும் பிரிட்டிஸாரால் பிரிக்கப்பட்டது. அஸ்ஸாமில் மக்கள் தொகை குறைவு. கிழக்கு வங்கத்திலிருந்து லட்சக் கணக்கானவர்கள் அஸ்ஸாமில் குடியேறினர். 1971ல் நடந்த பங்களாதேஷ் போரின் போது 1,100,000 அகதிகள் அஸ்ஸாமில் நுழைந்தனர். இவர்களில் 100.000 பேர்கள் அஸ்ஸாமிலேயே தங்கி விட்டனர்.

அஸ்ஸாமில் அந்நியரின் ஊடுருவல் தொடர்ந்தது. இதனைக் காங்கிரஸ் தடுக்கவேயில்லை, காரணம் அந்நியரின் ஓட்டு இ.காங்கிரஸுக்கே என்றதால் அஸ்ஸாமில் குடியேறியவர்கள் கிழக்கு பாக்கிஸ்தானிலிருந்து வந்த அயல் நாட்டவர் வங்காளத்திலிருந்து வந்த இந்தியர். கிழக்குப் பாக்கிஸ்தானிலிருந்து குடியேறியவர்கள் திட்டமிட்டு அஸ்ஸாம் மொழியே பேசினர். அஸ்ஸாம் மக்கள் சிறுபான்மையினராக மாறினர், அஸ்ஸாமியர்கள் வந்தேறிகளால் ஆதிக்கம் செய்யப்பட்டனர். 1918ல் 'மங்கள்தோய்' என்ற இடத்தில் இடைத் தேர்தல் நடைபெற்ற போது 70.000 புதிய பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்ட போது போதுதான் அஸ்ஸாம் மாணவர் சங்கம் தீவிரமாக செயல் பட்டது. அஸ்ஸாம் மக்களும் விழித்துக் கொண்டனர்.

**செ. அசோகன் எம்.ஏ**

அஸ்ஸாமியர்கள் அனைத்து துறைகளிலும் அடிமைப்பட்டு வாழும் நிலைமையை உணர ஆரம்பித்ததிலிருந்து போராட்டம் வெடித்தது. 1983ல் நடைபெற்ற தேர்தலில் 57 வாக்காளர்களுக்கு ஒரு ஆயுதம் தாங்கிய காவல் படை நிறுத்தப்பட்டது, ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இ காங்கிரஸ் 300 400 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றது. கோமேனியைவிட கொடூரமாக இந்திரா காந்தி செயல்பட்டார் என பத்திரிகைகள் விமர்சித்தன.

ஆரம்பத்திலே சீர்த்திருக்கக் கூடிய அந்நியர் பிரச்சனை பூதாகாரமாக வளர்க்கப்பட்டு, ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்து, ஒருவிதமான தீர்வுக்கு கொண்டு வரப் பட்டிருக்கிறது. இத்தொடர் போராட்டத்தில் மாணவர்களின் பங்கு மகத்தானது, மதிக்கத்தகுந்தது.

## கருப்பினத் தலைவர்

# நெல்சன் மண்டேலா



1964ல் இருந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் மண்டேலா. இவருக்கு தற்போது 67 வருடங்கள் ஆகின்றது. கருப்பு இன மக்களின் விடுதலைக்காக போராடும் இவர் சட்டம் படித்தவர். ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸில் 1944ல் சேர்ந்தார். அமைதி வழிப்போராட்டத்தால் பலன் இல்லை என உணர்ந்து 1960க்குப்பின் தலை மறைவாக செயல்படும் ஆயுதப் பிரிவை ஆரம்பித்தார்.

ஒரு சமயம் இவரது புகைப் படம் எல்லாக் காவல்காரர் களிடமும் இருந்தது. தேசத்தின் விரோதி நெ. 1 என்ற முத்திரை குத்தப் பட்டது. மண்டலே தொடர்ந்து, மறியல்-போராட்டம் கூட்டம் என நிறவெறி அரசை எதிர்த்து வந்தார். தன் சொந்த மக்கள் வெள்ளத்தில் நீந்தும் மீன் போல செயல் பட்டதால் கைது செய்ய இயலவில்லை. 1962ல் கைது செய்யப்பட்டார்.

22 வருட மொத்த சிறை வாசத்தில் உடல் நிலைதான் பாதிக்கப்பட்டதேயன்றி மன உறுதியும், விடுதலை வேட்கையும் குறைய வில்லை. "ஆயுத கிளர்ச்சியின் மூலம் அரசியல்

(15-ம் பக்கம் பார்க்கவும்)

# அது அழவே யில்லை

## கே. கணேஷ்குமார்

வேலைவிட்டு வரும்போதே மேட்டு லயத்து பாட்டியிடமிருந்து குழந்தையை வாங்கி வந்து கொண்டிருந்தாள் செல்லம்மாள்.

தூக்கி கட்டியிருந்த சேலைக்கு மேல் தேயிலை தண்ணீர் படாமலும் துணி கிழியாமலும் இறுக்க கட்டியிருந்த கோணி கூட ஈரத்தால் பாரமாக இருந்தது.

தலையில் வெறும் கூடை ஆடிக் கொண்டே வந்தது.

கைக்குழந்தையை முத்தமிட்டாள்.

அவளின் குளிர்ந்த அந்த இதழின் சுகத்தில் குழந்தை சிரித்தது.

வீட்டை நோக்கி வேகமாக நடைபோட்டாள்.

குழந்தைக்கு பால் கொடுக்க வேண்டும், சோறு ஆக்க வேண்டும், குளிக்க வேண்டும். அவருக்கு குளிக்க சுடுத்தண்ணீர் போடவேண்டும்.

தேயிலை நிறைந்த கூடையாய் மனம் கனத்தது.

தூரத்திலிருந்தே லயத்தைப் பார்த்தாள்.

அம்மா....மனம் வெடிப்புகளால் சிதறியது.

⁂ ⁂ ⁂

ஆறு மாதத்திற்கு முன் எவ்வளவு ஜனங்கள், குழந்தைகளின் கூக்குரல் ஒரு மைலுக்கு அப்பாலே கேட்குமே,

தண்ணீர்க்காகவும் குளிக்கவும் வரும்போதெல்லாம் கூட்டமாக கூடிப்பேசும் அந்த கும்மாளமிட்ட தினங்கள்.

ஓடுகளெல்லாம் பறிபோய் பல்லிளித்து நின்ற பிள்ளை மடுவத்தைப் பார்த்தாள்.

அந்தியில் எப்போதும் சில இள வட்டத்து பையன்கள் கூடி கதைப்பதும், அரட்டை அடிப்பதும் சில வேளைகளில், ''பைலா போடும் இடமாகும் நிலை மாறி இன்று இடிகாடாய் ஆனதை நினைக்கையில்.... நெஞ்சை வலித்தது.

இரு துளிகள் வேதனை துளியால் வீழ்ந்தன.

நாசமாய் போன அந்த சண்டை வராமல் போயிருந்தால்... மானத்தைகாப்பாற்றிக்கொள்ள சிலபேர்....மன்னார், வவுனியா பகுதி போய்விட்டார்கள் சிலர் இந்தியா போல்விட்டனர்.

பழகிப் போனவர்கள், பாசமாய் பொழிந்தவர்கள் இருந்த வீடுகள் எல்லாமே 'வெறிச் சோடி கிடந்தது.

செல்லம்மாவின் மனதில் இடிகள் முழங்கின, கண்ணீர் மழையானது...

அவள் நவரேலியா பக்கத்தில் ஒரு தோட்டத்தில் பிறந்தவள். நான்கு வருடத்திற்கு முன் தான் செல்லத்துரையுடன் கல்யாணமாகி இந்த தோட்டத்திற்கு வந்திருந்தாள். அவள் வந்தபோது, பச்சை பசேரென்ற தேயிலைச் செடிகள். இவளை சொக்க வைத்தன. அந்த லயன் நிறைந்த ஜனங்கள் வீடு. பற்றாக்குறைக்கு வீட்டுக்கு பின்னால் தாழ்வாரம் கூட இறக்கி கொண்டு வாழ்ந்த குடும்பங்கஉ...

மார்கழி மாதத்தில் விடியலில் அவன் பாடும் புதுமாதிரி பஜனைப் பாடல்கள்... அடடா தோட்டத்திற்கு அவன் செல்லப் பிள்ளைதான்.

அவளோடு கூடிப் பழகியவர்கள்—

கொழுந்து எடுக்கப் போகும் போது கூடிக் கதைத்தவர்கள் ஞாயிற்றுக் கிழமையானால் சந்தைக்குப்போய் வருவது, குளிக்கப் போகும் போது ஒருத்திக்கு ஒருத்தி உடம்பு தேய்த்து விட்டுக் கொள்வது.

'ஏண்டி செல்லம் உன் உடம்பு இப்படி தங்கச்சிலை மாதிரி இருக்கு. எனக்கே கட்டிக்க வேண்டும் போல் இருக்குது' என்று கூறிய தோழியின் பேச்சுகள்...

ஆட்கள் நிறைந்த வீடுகள் இன்று அழுது கொண்டிருந்தன.

⁂ ⁂ ⁂

இரவு வேகமாக வந்தாலும் செல்லம்மாவால் புரிய முடியவில்லை. மனம் ஒரு நிலையில் இல்லை.

"இந்த ஆளுகிட்டேயும் எவ்வளவு நாள் தான் கெஞ்சுறது இந்தாங்க. நாமும் மன்னாரோ வவுனியாவோ போவோம், இந்த புதைக் குழிகளில் வாழ முடியாது என்று,''

அவர் கூறியதிலும் உண்மை தானே தெரிகிறது.

'ஏன் செல்லம். என்னால் மட்டும் நிம்மதியா வாழ முடியுதா என்ன?

நீ மனம் விட்டுசொல்ற,நான் மௌனமாவே அழுகிறேன். நம்பகிட்ட என்னம்மா பணமா இருக்கு. கால்பவுன் தாலி கூட உனக்கு கட்டமுடியல... ஏதோ சேர்த்துவச்ச பணத்தை எல்லாம் பாவிகள் போன கலகலவரத்தில் கொண்டு போயிட்டாங்க. பச்சபுள்ளகாரி உன்ன வேலைக்கு போக விட எனக்கு மனசு வரல்ல செல்லம்மா, தங்க ரதமா இருந்த எப்படி ஆக்கிட்டேன் பார்த்தியா: என்ன கல்யாணம் பண்ணி நீ என்னம்மா சுகம் கண்ட; ஏதோ ஒரே ஒரு குழந்தை. இத மட்டும் தாம்மா....

நினைவுகள் நெஞ்சை அழுத்த அழுதே விட்டாள்!

விளக்கு ஏற்றக்கூட தோன்றவில்லை.

கட்டியிருந்த உடுப்பையோ கோணியையோமாற்றவில்லை.

குழத்தை செல்லம்மாவின் சீலையை மார்புச் சேலையை இழுத்தது. பசி போலும்,

கீழே அமர்ந்து சுவரோடு சாய்ந்துகொண்டு குழந்தைக்கு பால் ஊட்டி கொண்டிருந்தாள்....

லயத்தில் சில வீட்டில் மட்டுந்தான் மனிதர்கள்.

அவர்களும் மயான அமைதியில் வாழ்ந்தார்கள்.

தூரத்தே ஏதோ கூட்டமான சத்தங்கள், கதறல்கள்...

அவளுக்கு ஏதும் கேட்கவே இல்லை.

அழுகிறதும் அதிகாரக் குரலும் சேர்ந்து ஒலித்தன.

அவள் அசையவில்லை.

மிகவும் அருகே கேட்டது! ஓடிவரும் ஒலி.....

(அடுத்த இதழில் முடியும்)

---

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றத்திற்கு போராட மாட்டேன்'' என கூறினால் விடுதலை செய்வதாக நிறவெறி அரசு அறிவித்ததை ஒப்புக் கொள்ளவில்லை. காமன் வெல்த் நாடுகளின், செயலாளர் நாயகம், இவருக்கும் இவரது மனைவி வின்னி மண்டேலாவின் நிறவெறி எதிர்ப்பு போராட்டத்தை பாராட்டி 100,000 டாலர் பரிசளித்ததாக அறிவித்துள்ளார்.

வின்னி மண்டேலாவை சமீபத்தில் காவல் காரர்கள் வலுக்கட்டாயமாக வெளியேறியுள்ளனர். உடல் நலமின்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மண்டேலா விடுதலைச் செய்யப்படுவார் என உலகமே எதிர் பார்த்து ஏமாந்தது. மீண்டும் சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

உறுதி குன்றாத மண்டேலா, கருப்பு மக்களின் தலைவராக, நம்பிக்கையின் நட்சத்திரமாக, நிறவெறியர்களுக்கு சிம்மசொப்பனமாக திகழ்கிறார். கருப்பு இன மக்களின் சுதந்திரத்திற்கும், நீதிக்கும் 22 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலையிலிருந்து போராடும் மண்டேலேவுக்கு உலகம் தலைசாய்க்கிறது.

(படம் மண்டேலாவின் இளமைத் தோற்றம்)

# இன்றைய சமுதாயத்தில் பெண்கள்

வீட்டிற்கு வெளியே, வீட்டில் இருப்பதை விட பெண்களின் நிலைமை மிகக்கொடுமையானது.

திருமணத்தில் பெண் விளை பொருவாகவே-விற்பனை பண்டமாகவே கருதப்படுகிறாள்.

அவள் வீட்டில் உழைக்கும் தொழிலாளி போல இருந்தும், வெளியே சென்று உழைத்துக் கொண்டு வருகிறவளாக இருந்தும் அவள் சீதனத்தோடு, சீர்வரிசைகளோடு வரவேண்டும் என்றே விரும்பப்படுகின்றாள்.

வரதட்சனைப் பிரச்சனைகளால் புகுந்த இடத்தில் பெண்கள் கொடுமைக் குள்ளாக்கப்படுகிறார்கள்: தற்கொலை செய்து கொள்வதும் கொலைகள் செய்யப்படுவதும் அன்றாட பத்திரிகை செய்திகளாகி விட்டது.

## உழைப்பு சுரண்டல்

பெண்களின் உழைப்புசுரண்டப்படுகிறது. அவர்கள் ஆண்களுக்கு நிகராக உற்பத்தித் திறனிலும், வேலை நேரத்திலும் ஈடுபட்டாலும் அவர்களுக்கு குறைந்த ஊதியமே கொடுக்கப்படுகின்றது. பெண்கள் பலம் குறைந்தவர்கள்-மென்மையானவர்கள் என்பதும் அதனால் அவர்கள் வேலை நேரம் குறைவு, வேலை திறனும் குறைவு என்றும் தொழில் துறையில் இருக்கும் கருத்து. இதுவே இவர்களை சுரண்ட வழிசெய்கிறது.

அடுத்து-பெண்கள் போகப் பொருளாக கவர்ச்சிப்பாவைகளாக கருதப்பட்டு அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளே மிகுதியாகும்.

சினிமாவானாலும் விளம்பரமானாலும் புத்தகத்திலும் கதை கவிதை, காவிய மென்றாலும் பெண்கள் கவர்ச்சிப் பொருளாக, போதையூட்டும் வஸ்துவாக காட்டப்படுகிறார்கள்... பலாத்காரப் படுத்தப் படுகிறார்கள்; கற்பழிக்கப் படுகிறார்கள்: விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.



## வேலைத்தளத்தில்

வயல் வேலை என்றாலும் சரி, மலை தோட்டங்கள், தொழிற்சாலைகள் என்றாலும் சரி, வியாபார நிலையங்கள், அரசு அலுவலகங்கள் என்றாலும் சரி பெண்கள் இந்தநோக்கத்தோடே நடத்தப்படுகிறார்கள்-ஒரு வேலை கிடைக்க வேண்டு மென்றாலும் 'இதையே' லஞ்சமாக பெறுகின்றவர்களும் ஏராளம்.

சமூகத்தில் பெண்கள் நிலை இதுவென்று பார்க்கும் அதே வேளையில், இந்த பெண்கள் உலகில் இனத்தாலும் சாதியாலும் பொருளாதாரத்தாலும், தாழ்த்தப்பட்டு வலிமை குன்றி இருக்கும் பெண்கள் நிலை அதைவிட மிககேவலமானதாக இருக்கிறது.

## தாழ்த்தப்பட்டோர் நிலைமை

சாதிக் கலவரங்கள் நடக்கும் போது தாழ்த்தப்பட்ட பெண்கள் பலாத்காரத்திற்கும், கற்பழிப்புக்கும் ஆளாக்கப் படுகிறார்கள். இன, மொழிக் கலவரங்கள் போது ஒடுக்கப்பட்ட அல்லது சிறுபான்மை மொழியினர், இனத்தவர் பிரிவைச் சார்ந்த பெண்கள் இந்த நிலைக்களாகிறார்கள். உலக நாடுகளில் புரட்சி, விடுதலைப் போர் நடக்கும் போதும் இதே நிலைதான்.

ஆளும் அதிகாரவர்க்கத்தின் காவற்காரராக இருக்கும் போலீசும், இராணுவமும் ஒடுக்கப்பட்டும் அடக்கப்பட்டும் விடுதலைக்கு போராடும் பிரிவினரின் பலாத்காரத்திற்கும், கற்பழிப்புக்கும் ஆளாக்கி போகக் கருவியாக பயன்படுத்துகிறார்கள். விடுதலைக்கு போராடும் எல்சால்வடோர், சிலி, ஈழம் போன்ற நாடுகளில் இதே நிலைமை தான்.

நவீன விஞ்ஞானம் வளர்ந்தும் பெண்களின் இழிநிலை தீரவில்லை.

## பத்தாண்டு முயற்சிகள்

ஐக்கிய நாடுகள் அவை (U.N.) 1976 முதல் 1985 வரையிலான பத்து ஆண்டுகளை பெண்களுக்கு சமநீதி, முன்னேற்றம், சமாதானம் ஆகியவற்றை அடைய பல முயற்சிகள் செய்தது. அனைத்துலக பெண்கள் ஆண்டாகிய 1975ல் நடைபெற்ற மெச்சிகோகருத்தரங்கில் 125 நாட்டுப் பிரதிநிதிகள் பங்கு கொண்டு 1976-85வரையிலான ஆண்டுகளை பெண்களின் வளர்ச்சிக்காக செலவிட வேண்டுமென தீர்மானித்தது. ஐக்கிய நாடுகளின் பொது அவை, இதனை செயல்படுத்த சம்மதித்தது. 1980ல் நடைபெற்ற Copenhager. உலக மாநாட்டில் முதல் ஐந்தாண்டுகளில் செய்த சாதனைகளை மதிப்பீடு செய்தது. 145 நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர், பெண்கள் கல்வி, வேலை வாய்ப்பு, சுகாதார வசதிகளில் முன்னேற்றம் கண்டுள்ளதாக தெரிவித்தனர்.

ஆயினும் பெண்கள் சுமை குறையவில்லை. அவர்கள் மீது செலுத்தப்படும் கொடுமைகள் ஓயவில்லை.

இதை பல ஆய்வுகள் புள்ளி விபரங்கள் தெள்ளத் தெளிவாக தெரிவிக்கின்றன.

∴ ∴ ∴

## பெண்கள் முன்னேற்றத்திற்கு தடைக் கற்கள் !

1979ல் ஐக்கிய நாடுகள் பொது அவை; பெண்களுக்கு எதிரான அனைத்து கொடுமைகளையும் களைவதற்காக ஒரு மசோதா இயற்றியது. அதில் கடைசிவரை முதலாளித்துவ நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற நாடுகள் கையொப்ப மிடாமல் காலம் தள்ளியது குறிப்பிடத்தக்கது.

∴ ∴ ∴

ஏகாதிபத்திய சாம்ராஜ்யம், காலனி ஆதிக்கம், விரிவாக்கக் கொள்கை, இனவெறி, நிறவெறி, சியோனிசம் ஆகியவை பெண்கள் முன்னேற்றத்தின் முக்கியத் தடைக்கற்கள் என்று மாநாட்டு தீர்மானித்தில் குறிப்பிடப்பட்டது. ..

# சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில்கள்-கடனுதவி-மானியம்

படித்து விட்டு பல வருடங்களாக வேலை கிடைக்காமல் பல இளைஞர்கள் வாடுகின்றனர். இவர்களுக்கு உதவும் அரசு பிரதமரின் சுய வேலை வாய்ப்பு திட்டம் என்ற ஒன்றை ஆரம்பித்து செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் சுயமாக தொழில் தொடங்க விரும்பும் படித்த இளைஞர்களுக்கு ரூபா 25,000 கடன் உதவி வழங்கப்படுகிறது. இத்தொகையில் 25 சதவீதம் மானியமாகும். தொழில் கல்வி பயின்றவர்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் செய்யக்கூடிய பல தொழில்களை அறிமுகப் படுத்தியும் உள்ளது.

அவைகளை இங்கு குறிப்பிடுகிறோம் -

ஊதுபத்தி துணிதுவைக்கும் சோப், சோப்பவுடர், வாசனை திரவியங்கள், மெழுகுவர்த்தி, கார்ட் போட், பெட்டிகள், பிளாஸ்டிக் பொருட்கள், பால் பாயின்ட் ரீபில், பிலாஸ்டோர் ஆஃப் பெரிஸ் பவுடர், பசை, ரப்பர் பொருட்கள், கிளீனிங் பெனாயில் முதலான ரசாயனம் சம்பந்தப்பட்ட தொழில்கள் செய்யலாம்.

பால்பண்ணை, அது தொடர்பான தயாரிப்புகள், ஸ்நேக் பார், காப்பிபார், தேனீர் கடை. மா மில், உருளைகிழங்கு சிப்ஸ் இனிப்பகம். மிட்டாய்வகைகள், குளிர்பானங்கள், கேன்டீன், ஊறுகாய், வகைகள், ஐஸ் கிறீம் விற்பனை, பால்விற்பனை நிலையம், அப்பளம் தயாரித்தல், விற்பனை செய்தல், வண்டிகளில் பழங்கள் விற்றல், பழரசஸ்டால், சோடா பேக்டரி, காபி பவுடர் தயாரித்தல், பாப்கான் (சோள பொறி) மிளகாய், மசாலா பவுடர் தயாரித்தல் முதலான உணவு சம்பந்தப்பட்ட தொழில்களை ஆரம்பிக்கலாம்.

இரும்புத்தளவாடங்கள் தயாரித்தல், அறவை யந்திரம், பாத்திரங்கள் சர்வீஸ் செய்தல், பூட்டுத்தயாரித்தல். வெல்டிங் வேலைதளம், கடிகாரம்பழுதுபார்த்தல், அச்சகம், ஜாப் டைப்பிங், சைக்கிள் பழுது பார்த்தல், வாடகைக்கு விடல், போரிங் போடுதல் எவர்சில்வர் பாத்திரங்கள் தயாரித்தல், டைகள் தயாரித்தல் போன்ற பொறியியல் சம்பந்தப்பட்ட தொழில்களை தொடங்கலாம்.

மின்சார பொருட்கள் ரிப்பேர் செய்தல், வயரிங் செய்தல் டியூப் லைட் சாக்ஸ், டிரான்ஸ்போமர்ஸ் தயாரித்தல், குளிர் சாதனப் பொருட்கள் சர்வீஸ் செய்தல் போன்றவைகள், டி.வி, டேப் ரெக்கார்டர், ரேடியோ, எம்லிபயர் முதலானவை ரிப்பேர் செய்தல் இது போன்ற எலக்ட்ரானிக் தொழில் நடத்தலாம்.

தையல் பயிற்சி அளித்தல், தைத்தல், ரெடிமேட் ஆடைகள் தயாரித்தல், விளம்பர பைகள், துணிப் பைகள் தயாரித்தல், போன்ற துணிகள், ஆடைகள் சம்பந்தப்பட்டவைகள் தொடக்கலாம்.

சூட்கேஸ், டிராவல் பேக்ஸ், பர்ஸ்கள், கையுறைகள் மற்றும் தோல் காலணிகள் தயாரித்தல், தோல் பதனிடும் தொழில் சாலை கழிவுகளிலிருந்து பசை வகைகள் தயாரித்தல் போன்ற தோல் சம்பந்தப்பட்ட தொழில்கள் செய்யலாம்.

மற்றும் போட்டோ ஸ்டுடியோ, ஸ்கிரீன் பிரிண்டிங், செராக்காப்பி எடுத்தல், நடமாடும் நூலகம், செங்கல் தயாரித்தல், தளவாட விற்பனை முதலான பல்வேறுபட்ட சிறு சிறு தொழில்களை செய்யலாம் என்று தெரிவிக்கிறது.

இவை சம்பந்தமான மேல் விவரங்களை பெற ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட தொழில் மையத்தை அணுகினால் பெறலாம். O

**சுயமாக தொழில் செய்யலாம்**

## கூட்டுறவு வங்கி அமைக்க ஏற்பாடு

தாயகம் திரும்பியோர்க்கு மத்தியில் உதவும் வகையில் கூட்டுறவு அடிப்படையில் வங்கி ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு மற்றும் நிதிவளர்ச்சி வங்கியின் டெலிகேட்டுகள் யூனியன் தீர்மானத்தின் அடிப்படையில் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான குழுவில் எம்' ஆர். லிங்கம் B.E; உதயாணன்' எஸ். எஸ். சந்திரன், வேணு கோபாலன், டி. எஸ். ராஜூ மற்றும் அட்வகேட் தேவதாஸ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

மேற்படி வங்கி அமைப்பதில் சட்டப்பிரச்சனைகள் சம்பந்தமாக ஆராய்ந்து அதற்கான சட்ட விதிகளையும், கொள்கை நோக்கங்களையும் தயாரித்து வருகின்றனர். விரைவில் இதன் நகல் டெலிகேட்டுகளின் ஆலோசனைகளுக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கிறது. O

## சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ கடன் பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகிறது

படித்து விட்டு வேலை இன்றி இருக்கும் இளைஞர்கள் சுயமாக தொழில் தொடங்குவதற்கான கடன் பெற,

**தொழில் ஆணையர் மற்றும் தொழில்வணிக இயக்குனர் அலுவலகம் சென்னை-600 005**

விண்ணப்பம் கோரியுள்ளது.

வழங்கப்படும் கடன்தொகை ரூபா 25000. இதில் 25சதவிகிதம் மானியமாகும். 18 லிருந்து 35 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்பம் செய்கிறவர்கள் மெட்ரிகுலேசன் அல்லது அதற்கு சமமான படிப்பு படித்திருக்க வேண்டும். தொழில் கல்வி பயின்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

விண்ணப்பம் செய்யும்பொது "விளம்பர எண் 93300 மா. தொ. மை 3/85" என்று தவறாது குறிப்பிட வேண்டும்.

வெள்ளைத் தாளில் உரிய விபரங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலுள்ளவங்களும் விண்ணப்பிக்கலாம் என்று மேற்படி விளம்பரம் தெரிவிக்கிறது.

இது சம்பந்தப்பட்ட மேலதிக விளம்பரங்களை மாவட்ட தொழில் மையங்களில் பெறலாம். O

## இலங்கை....

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வேலைக்குச் செல்ல மாட்டார்கள். இதனால் கொழுந்தெடுப்பது, அரைப்பது, வேறு எந்த வேலைகளும் நடைபெறாது. எனவே இது ஒரு வகையில் மறைமுகமாக ஒரு வேலை நிறுத்தப் போராட்டமேயாகும்.

இ. தொ.கா. வெளியிட்டுள்ள விளம்பரம் குறித்தும், இது, ஆரம்பித்து நடத்தஇருக்கும் (1986 ஜனவரி 14 முதல் 1986 ஏப்ரல் 15 வரை) இந்த சாத்விக போராட்டம் குறித்து, தமிழ் நாட்டில் வந்திருக்கின்ற மலையக தமிழ் மக்களைத் சார்ந்த பிரமுகர்களிடம் கருத்து கேட்டபோது பல்வேறு கருத்துகள் சொல்லப்பட்டன.

அவை வருமாறு-

'தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த வரை இ. தொ. கா. சக்தியுள்ள தொழிற் சங்க மென்றாலும் இன்னும்பல தொழிற்சங்கங்கள் இயங்குகின்றன. இந்த சங்கங்கள் அனைத்தும் இதில் ஈடுபட்டால் நிச்சயம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

'ஆனால் எல்லாசங்கங்களும் இதில் கலந்து கொள்கின்றனவா? இ. தொ. கா. எல்லா சங்கங்களையும் கலந்து இப்படி ஒருமுடிவிற்கு வந்ததா என்பது தெரியவில்லை. அல்லது இழந்து போய் கொண்டிருக்கின்ற தன்னுடைய [illegible] லத்தை-பெயரை இழுத்துப் பிடித்துக் காப்பாற்றிக்கொள்ள இது ஒரு ஸ்டண்ட் நடவடிக்கையா? என்று கூட சந்தேகிக்கத் தோன்றுகிறது.

"இந்த வேலை நிறுத்தத்திற்குரிய காலம் இதன் நோக்கத்தை வெற்றிபெறச் செய்யுமா? காரணம் ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரையான மாதங்கள் தேயிலை மகசூல் குறைகிற காலம். அதாவது தேயிலைக் கொழுந்து வளர்ச்சி குறையும் காலம். இக்காலத்தில் கொழுந்து குறைவதால் வேலையும் குறையும். இதனால் வேலை நாட்களும் குறையும். எனவே இந்த பிரார்த்தனை, தியானம் மூலம் செய்யும் போராட்டம் வெற்றி பெறுமா? தோட்டப் பொருளாதாரத்தை ஸ்தம்பிக்க வைக்குமா என்பது கேள்விக் குறி" என்றும் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதே வேளையில் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் இந்த விளம்பரம் ஏன்? இதை இந்தியாவில் வெளியிடுவதன் எதிர் பார்ப்புகள் என்ன? இதற்கான தேவையென்ன? இதனால் விளையப் போவது என்ன? என்பதும் ஆராய்ந்து பார்க்க வேண்டியது என்பது பலரது கருத்தாகும்.

**டிசம்பர் 31க்குள் மலையகத் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்காவிட்டால் தனது பதவியிலிருந்து ராஜினாமா செய்வேன் என்று தொண்டமான் அறிவித்திருந்ததும் குறிப்பிட்டது.** O

## கொடைகானல்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை கிட்டதட்ட 10 ஆயிரம் ரூபாய் வகையில் பேங்கில் கடன் பெற்று (நிலத்தை அடகு வைத்து) வெள்ளாமை செய்கிறோம். ஆனால் லாபமோ போட்ட முதலோ கிடைத்பாடில்லை. இடையில் கால நிலையும் தொல்லை கொடுக்கிறது. இந்தக் கடன் கட்ட தவறினால் எங்கள் நிலமும் பறிபோகும் நாங்களும் நாதியற்று போய் விடுவோம்.

இதனால் இலங்கை இந்திய ஒப்பந்தமா? என்ற கேள்வியுடன் எங்களுக்கு வீடுகட்ட கொடுத்த இடத்தில் அடிக்கல் நாட்ட முற்பட்டபோது உள்ளூர் வாசிகளுக்கும் எங்களுக்கும் மோதல்கூட ஏற்பட்டது."

இவற்றை விவரித்தவர்கள் எப்படியும் எங்கள் குரல்கள் மத்திய மாநில அரசுக்கு எட்டும்படி உதவி செய்யுங்கள் என்று கைகூப்பிய வண்ணம் எங்களுக்கும் நல்ல காலம் வருமா? என்று கூறிய வார்த்தைகள் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. என்றுதான் இந்த ஏழைகளின் கண்ணீர் துடைக்கப்பட போகின்றதோ?

இப்பகுதி மக்களுக்கு சொராக் மைத்ரீ மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்கள் சில அவ்வப்போது சில உதவிகளைச் செய்வதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இக்கிராமத்தில் உள்ள சுமார் 74 மாணவ மாணவியரை ஒரு கிறிஸ்துவ நிறுவனம் திண்டிவனத்திற்கு அழைத்துச்சென்று அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய் குழந்தைகளுக்கான கல்வியை தொடர ஆவன செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிறுவனத்திற்கு குழந்தைகளின் பெற்றோர்கள் அனைவரும் தங்களின் நன்றியை காணிக்கையாக்கி உள்ளனர்.

தொடர்ந்தும் பல சமூக சேவை நிறுவனங்கள் இந்தப் பகுதிக்கு விஜயம் செய்து தங்கள் குறைகளை தீர்க்க வேண்டும் என்றும் தங்களில் என்பதும் தங்களின் பிரச்சனைகளை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதும் இவர்களின் ஆவல்? O

## இன்றைய...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு தேவையும் அவசியமும் என்ன?

3. இம்மக்கள் பிற இலங்கைத் தமிழர்களிலிருந்து மாறுபட்டு நிற்கிறார்களா? இல்லையா? என்ன காரண காரியங்கள்?

4. இச் சமூகத்திற்கானத் தீர்வு எது? அது தொடர்ந்து இனவாத அடிப் படையில் இருக்கப் போகின்றதா? அல்லது மாறுபட்டு இருக்கப் போகின்றதா?

இவற்றில் இன்னும் பல உப கேள்விகளும் சேர்க்கப் படலாம். ஆனால் இவைகள் அடிப்படைக் கேள்விகள்.

## தமிழர் நல மருத்துவ அமைப்பு நிதியுதவி நாடகம்

தமிழர் நல மருத்துவ அமைப்பு நிதி உதவிக்காக இராணி சீதை மண்டபத்தில் 4-2-85 அன்று மாலை 6-45 மணிக்கு எஸ். வி. சேகரின் "வால் பையன்" என்னும் நாடகம் நடைபெறுகிறது.

தமிழர் நல மருத்துவ அமைப்பு (MUST) ஈழத்திலும், தமிழகத்தில் வாழும் ஈழ தமிழ் அகதிகளுக்கும் அவர்களது அடிப்படைத் தேவைகளான மருத்துவ உதவியையும், உடை வகைகளையும், இலவசமாக வுநியோகித்து சேவை செய்துவத்துள்ளது. இதனது தலைமை அலுவலகம் வைத்தியப் பிரிவில் இதுவரை ஆயிரக்கணக்கான ஈழத்து அகதிகளுக்கும், ஈழ விடுதலை போராளிகளுக்கும், சுற்றுப்புறத்திலுள்ள தமிழக மக்களுக்கும், முகாமில் உள்ள அகதிகளுக்கும் தனது மருத்துவ உதவியைச் செய்து வந்துள்ளது. O

இந்த அடிப்படையில் ஒரு அடிப்படையில் ஒரு ஆரோக்கியமான விவாதம் தொடங்கப் படவேண்டும் என்பதே என் அவா. அதற்கு மக்கள் மறுவாழ்வு ஒரு களமாக விளங்க வேண்டும். நான் இங்கு எழுத்தில் கோருவது அதுவே. இது அத்தகைய விவாதத்திற்கு ஒரு ஆரம்பமாக இருக்க வேண்டும் என்பதாலேயே நான் கேள்விகளை மட்டுமே எழுப்பியிருக்கிறேன். எனவே, 'மக்கள் மறுவாழ்வின்' முன் முயற்சியொடு இந்த விவாதம் தொடங்கப்பட வேண்டும் என மீண்டும் வலியுறுத்தி கோருகிறேன். O

Editor & Publisher: T.S. RAJU, Gangaiamman kovil Street, Madras-600094. Printed: L. S. Srinivasan at Jai Kalidas Press, 29, B.E. Colony 4th Street, Madras-24.
**Published in Collaboration with the ISLAND TRUST.**

Regd. No. R. N. 42556/83 Regd. No. TN/MS (C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின்
வழிகாட்டி

மக்கள் மறுவாழ்வு

தொடர்பு முகவரி :
1, தெற்கு கெங்கையம்மன் கோயில் 2வது தெரு,
சென்னை—600 094

# தாயகம் திரும்பியோர் – அகதிகள் தினம்

டிசம்பர் 15ந் தேதி கோத்த கிரியில் தாயகம் திரும்பியோர்- அகதிகள் தினம் வெகுசிறப்பாக கடைப்பிடிக்கப் பட்டது. மக்கள் மறுவாழ்வு மன்றமும், ஜே. ஆர். எஸ்ஸும் இணைந்த ஏற்பாடு செய்திருந்த இக்கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வருகை தந்திருந்தனர்.

கூட்டத்திற்கு திருச்செந்தூரன் தலைமை தாங்கினார். திரு சந்திரசேகரன் வரவேற்புரை வழங்கினார்.

வணபிதா இருதயசாமி அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

மக்கள் மறுவாழ்வு மன்றங்களைச் சேர்ந்தவர்களான திருவாளர்கள் செல்வராஜ், சந்திரலிங்கம், ஞானப்பிரகாசம், மணி நவரட்ணம், அடைக்கலம் மற்றும் திருமதி மேஸி, செல்வி, பர்இனிஜ் ஆகியோர் பேசினார்கள்.

இறுதியில் திரு ஆர். ஆர். சிவலிங்கம் அவர்களின் பேருரை வழங்கினார்கள் திரு ஆர் ஆர். சிவலிங்கம் அவர்கள் பேருரை வழங்கினார்கள். திரு சந்தான கிருஷ்ணன் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

## கொடைகானலில் ஊர்வலம்- கூட்டம்

தாயகம் திரும்பியோர்-அகதிகள் தினம் கொடைகானலில் சமூக நல அமைப்புகளின் கூட்டுக்குழு ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.

ஊர்வலமும் இடம் பெற்றது. இந்த ஊர்வலத்திலும் கூட்டத்லும் ஏராளமான பெண்கள் கலந்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

## அகதிகள் கலந்துரையாடல்

ஈழ ஏதிலிகள் மறுவாழ்வு கழகம் 27-12-85 அன்று அகதிகள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது.

சென்னை, உலக பல்கலைக் கழக சேவைகள் மைய மகா நாட்டு மண்டபத்தில் நடைப் பெற்ற இக் கலந்துரையாடலில் 130 பிரதிநிதிகள் கலந்துக் கொண்டார்கள்.

அகதிகள் பிரச்சனைகள் குறித்தும், அரசு அதிகாரிகளுடன் எப்படி தீர்த்துக் கொள்வது என்பது பற்றியும் இந்த கலந்துரையாடலில் ஆராய்ப் பட்டன,

## பெண்கள் கருத்தரங்கம்

தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு ஆய்வு மற்றும் தகவல் மையமும் ஜே, ஆர் எஸ்ஸும் இணைந்து தாயகம் திரும்பியோர் மத்தியில் பெண்களுக்கான கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது.

இக்கருத்தரங்கம் தாயகம் திரும்பியோர் மத்தியில் பெண்கள் பிரச்சனை, சமூகத்தில் பெண்களின் பங்கு, கல்விகுடும்பநலம் முதலான பலவேறு கருத்துகள் இடம் பெற்றன:

ருத்தரங்கம் திரு. ஆர். ஆர். சிவலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது வணபிதா குட்டினா, சகோதரர் அல்போன்ஸஸ், திருச்செந்தூரன் மற்றும் செபஸ்தியன், பாலகிருஷ்ணன் அரு. சிவானந்தன் முதலானோர் விரிவுரை வழங்கினர்.

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சிச் சென்று வெடி வைக்கப்பட்டதில் 60 பேர் பலியாயினர்.

டிசம்பர்

7 - தென்னாசிய மண்டல ஒத்துழைப்பு அமைப்பு துவக்கப்பட்டது.

31 - யுனெஸ்கொவிலிருந்து பிரிட்டன் வெளியேறியது.

மற்றவை

1) கினியா, லிபியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் நடந்த இராணுவ புரட்சி தோல்வி அடைந்தது.

2) ஈரான்—ஈராக் போர் தொடர்கிறது.

3) இலங்கையில் இனப்படுகொலை தொடர்கிறது. திம்பு பேச்சு வார்த்தை தோல்வி அடைந்தது.

தொகுப்பு: ஜான் பிரிட்டோ

---

தாயகம் திரும்பியோர்

கூட்டுறவு வங்கி

## பிரதிநிதிகள் பேரவைக் கூட்டம்

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் 10வது பிரதிநிதித்துவ பேரவைக் கூட்டம் 3-2-1986 அன்று பூந்தமல்லி நெடுஞ்சாலையிலுள்ள தாசப் பிரகாஷ் ஹோட்டலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வங்கியின் இயக்குனர்கள் மற்றும் தமிழ் நாடு, கேரளா, கர்னாடகா, ஆந்திர பிரதேஷ் ஆகிய மாநிலத்திலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துக் கொள்வார்கள். O

---

## மக்கள் மறுவாழ்வு

### சந்தா விபரம்

தனிப்பிரதி: 75 காசுகள்
ஆண்டுச்சந்தா: ரூபா 10-00

சந்தாவை 'மக்கள் மறுவாழ்வு' என்ற பெயருக்கு மணியார்டர், போஸ்ட்ல் ஆர்டர் மூலம் அனுப்பவும்.

விபரங்களுக்கு :

மக்கள் மறுவாழ்வு
சென்னை-600094